தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

12.02.2013 A.M

## கெம்மாரம்பாளையத்தில் தோட்டக்கலை பயிற்சி முகாம்

காரமடை அடுத்த கெம்மாரம்பாளையத்தில், தோட்டக் கலையில் உயர் தொழில்நுட்பம் குறித்த பயிற்சி முகாம் சனிக்கிழமை நடைபெற்றது.

காரமடை தோட்டக்கலைத் துறை அலுவலகம் சார்பில், ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்ட நிதியுடன் நடைபெற்ற இம் முகாமிற்கு கெம்மாரம்பாளையம் ஊராட்சித் தலைவர் வெள்ளிங்கிரி தலைமை வகித்தார். தோட்டக்கலை துணை அலுவலர் பழனிசாமி வரவேற்றார்.

காரமடை தோட்டக்கலை உதவி இயக்குநர் பிரேமலதா பேசுகையில், தோட்டக்கலையில் துல்லியப் பண்ணையம் மூலமாக காய்கறிச் சாகுபடி, சொட்டு நீர்ப்பாசனம், நீர்வழி உரமிடல், ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகள் குறித்து கூறினார்.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர் அழகுமணி பேசுகையில், வேளாண் பொருள்களின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்துதல் குறித்து விளக்கினார். இதைத் தொடர்ந்து, விவேகானந்தபுரம் வேளாண்மை அறிவியல் மையத்தில் மண் பரிசோதனை செய்வது குறித்து பயிற்சியாளர் சுகந்தியும், குழு தட்டு நாற்றங்கால் முறையில் நாற்று தயாரித்தல் மற்றும் வாழைக்கு டிரில் முறையில் குழியெடுப்பது குறித்து செய்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

கெம்மாரம்பாளையம் ஊராட்சி உள்பட காரமடை வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த 50 விவசாயிகள் கலந்து கொண்டனர். உதவி வேளாண்மை அலுவலர் சேகர் நன்றி கூறினார்.

## அரசாணையை மீறி திருமூர்த்தி அணையில் தண்ணீர் திறப்பு! பிஏபி விவசாயிகள் புகார்

அரசாணையை மீறி அதிகாரிகள் தன்னிச்சையாக திருமூர்த்தி அணையில் இருந்து திங்கள்கிழமை தண்ணீர் திறந்துவிட்டுள்ளதாகவும், இதனால் 3-ஆம் மண்டல பாசனம் கடுமையாக பாதிக்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பிஏபி விவசாயிகள் புகார் கூறியுள்ளனர்.

பிஏபி பாசனத் திட்டத்தில் உள்ள 4 லட்சம் ஏக்கர்கள், நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டு ஆண்டுக்கு 2 மண்டலங்கள் வீதம் பாசனத்துக்கு தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு

மண்டலத்திலும் சுமார் 1 லட்சம் ஏக்கர்களுக்கு முறை வைத்து தண்ணீர் விடப்பட்டு வருகிறது.

இந்நிலையில் 3-ஆம் மண்டல பாசன பகுதிகளுக்கு டிசம்பர் 14 ஆம் தேதி திருமூர்த்தி அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது. வழக்கமாக ஒரு மண்டலத்துக்கு சுற்றுகள் அடிப்படையில் குறைந்தபட்சம் 95 நாள்களுக்கு தண்ணீர் வழங்கப்பட்டு வந்தது.

ஆனால், இந்த முறை 3 ஆம் மண்டலத்துக்கு 44 நாள்களுக்கு மட்டுமே தண்ணீர் வழங்கப்பட்டது. ஒரு வருடமாக பிஏபி பாசனப் பகுதிகள் கடும் வறட்சியில் உள்ள நிலையிலும், இதை ஏற்றுக்கொண்டு விவசாயப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் திங்கள்கிழமை திருமூர்த்தி அணையில் இருந்து நல்லாற்றின் வழியாக தினமும் 100 கன அடி தண்ணீர் வீதம் 5 நாள்களுக்கு திறந்துவிடப்பட்டது.

3 ஆம் மண்டலத்தில் 3-ஆவது சுற்றுக்கு இன்னும் 10 நாள்களுக்கு தண்ணீர் வழங்க வேண்டிய நிலையில் நல்லாற்றில் பொதுப்பணித் துறை அதிகாரிகள் எந்தவித அரசாணையும் இல்லாமல் தண்ணீர் திறந்துவிட்டுள்ளது விவசாயிகளிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து பிஏபி விவசாயிகள் கூறியது: அரசாணையில் குறிப்பிட்டபடி, தண்ணீர் திறந்துவிடாமல் பொதுப்பணித் துறை அதிகாரிகள் தன்னிச்சையாக முடிவெடுத்துள்ளனர். இதனால் 3 ஆம் மண்டல பாசனம் கேள்விக் குறியாகிவிட்டது. ஏற்கனவே 2 ஆம் மண்டல பாசனத்திலும் இதேபோல அரசாணையை மீறி நல்லாற்றிலிருந்து தண்ணீர் திறந்துவிட்டனர்.

அப்போது உடுமலை வட்டாட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு அதிகாரிகள் மீது குற்றச்சாட்டுக்களை வைத்தோம். ஆனால் பொதுப்பணித் துறை அதிகாரிகள் எங்களை உதாசீனப்படுத்தி பேசியதால் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதைத்தொடர்ந்து விவசாயிகள் அனைவரும் கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்தோம்.

தற்போது 3 ஆம் மண்டலத்திலும் பொதுப்பணித் துறை அதிகாரிகள் குளறுபடி செய்து வருகின்றனர். இதுகுறித்து அரசு விசாரணை நடத்த வேண்டும் என்றனர்.

திருமூர்த்தி அணை செயற்பொறியாளர் கே.சுப்பிரமணியம் திங்கள்கிழமை கூறியது: உடுமலையின் மேற்கு பகுதி கிராமங்கள் பயன்பெறும் வகையில் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. இதற்கு அரசாணை பெறப்பட்டுள்ளது என்றார்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 38.85 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 38.85 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 150 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 88 கன அடி நீரும், வாய்க்காலில் 2,000 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர்இருப்பு 2.27 டி.எம்.சி.

## மானிய விலையில் ஜிப்சம் உரம் விற்பனை

கோபி ஒன்றியத்தில் மானிய விலையில் விவசாயிகளுக்கு ஜிப்சம் உரம் விற்பனை செய்யப்படுகிறது என வேளாண்மை உதவி இயக்குநர் ஆசைத்தம்பி தகவல் தெரிவித்தார்.

கோபி வேளாண்மை வட்டாரத்துக்குள்பட்ட அயலூர், வெள்ளாங்கோவில், கடுக்காம்பாளையம், பொலவக்காளிபாளையம், கொளப்பலூர், வெள்ளாளபாளையம், பொம்மநாயக்கன்பாளையம், கூகலூர் ஆகிய பகுதிகளில் நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் இறவை முறையில் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டு உள்ளது.

கோபி நிலக்கடலைச்செடி நன்கு வளர்ச்சி அடைந்து உள்ளதால், களை வெட்டும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு உள்ளனர். நிலக்கடலை சாகுபடி செய்து உள்ள விவசாயிகள் கூடுதல் மகசூல் பெற ஜிப்சம் உரத்தை இட வேண்டும் என்று வேளாண்மை அதிகாரிகள் அறிவுறுத்தி உள்ளனர்.

இதுகுறித்து கோபி வேளாண்மை உதவி இயக்குநர் ஆசைத்தம்பி கூறியது:

நிலக்கடலை மட்டுமல்லாமல் களர் மண் நிலங்களில் சாகுபடி செய்யப்பட்டு உள்ள பயிர்களின் மகசூலை அதிகரிக்க ஜிப்சம் பயன்படுத்தப்படுகிறது. நெல், கரும்பு உள்ளிட்ட பல்வேறு பயிர்களுக்கு ஜிப்சம் உரமிட்டு, பயிர் வளத்தை அதிகரிக்கலாம்.

தற்போது ஜிப்சம் உரம் 50 சதவீதம் மானிய விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

இதற்காக ஹெக்டேருக்கு ஒன்றுக்கு ரூ.750 மானியமாக வழங்கப்படுகிறது. எனவே, ஜிப்சம் உரம் தேவைப்படும் விவசாயிகள், தங்களின் ரேஷன் கார்டு நகலுடன் சம்பந்தப்பட்ட வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகி பயன் பெறலாம் என்றார்.

## வாழைகள் வெட்டி சாய்ப்பு

முக்காணியில் வாழைத் தோட்டத்தில் வாழைகளை வெட்டி சாய்த்த தந்தை மற்றும் மகன்களை போலீஸôர் தேடி வருகின்றனர்.

முக்காணி யாதவர் தெரு முத்து மகன் ஆறுமுகம்(44). இவர் தனக்கு சொந்தமான 32 சென்ட் நிலத்தில் 320 வாழை பயிர் செய்துள்ளார். இந்த வாழைத் தோட்டத்தில் முன் விரோதம் காரணமாக 320 வாழைகளையும் வெட்டி சாய்த்துள்ளனர். இதில் நூறு குலை தள்ளிய வாழைகளாகும். இது தொடர்பாக ஆறுமுகம் புகாரின் பேரில் ஆத்தூர் போலீஸôர் முக்காணியைச் சேர்ந்த முருகதாஸ் மகன் உத்தமன் மற்றும் அவரது மகன்கள் முத்துகிருஷ்ணன், பாலகிருஷ்ணன் ஆகிய மூன்று பேர்கள் மீது வழக்கு பதிந்து, மூவரையும் தேடி வருகின்றனர்

## குரும்பூரில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில், குரும்பூரில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இருபோக விவசாயமின்றி பாதிப்படைந்த விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 25 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும்; ஸ்ரீவைகுண்டம் அணை மற்றும் கடம்பா குளம் கீழுள்ள அனைத்துக் குளங்களையும் தூர்வார வேண்டும்.

ஸ்ரீவைகுண்டம் அணையின் கீழுள்ள 18 ஷட்டர் மடைகளையும் மாற்றி சரி செய்ய வேண்டும்; அனைத்துக் கால்வாய்களையும் தூர்வாரி மராமத்து செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

திருச்செந்தூர் வட்ட விவசாயிகள் சங்கத் தலைவர் வி.நடேச ஆதித்தன் தலைமை வகித்தார். செயலர் எம்.ராஜா முன்னிலை வகித்தார்.

ஆர்ப்பாட்டத்தை மாவட்டத் தலைவர் எஸ்.எம்.ராமையா தொடங்கி வைத்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலர் ஏ.மோகன்ராஜ், ஏஐடியூசி மாவட்டச் செயலர் இ.கிருஷ்ணராஜ், விவசாய சங்க மாவட்டக் குழு உறுப்பினர்கள் பி.ஏ.ராஜகோபால், எஸ்.ராஜலிங்கம், மாவட்ட உதவித் தலைவர் ஏ.எம்.கணேசன், ஏ.ஐ.டி.யூ.சி. எம்.பரமசிவன் உள்ளிட்டோர் பேசினர்.

விவசாய சங்க குரும்பூர் கிளைத் தலைவர் சு.பாண்டி, செயலர் மா.முத்து, துணைத் தலைவர் ஜெயக்குமார், மா.சேர்மத்துரை மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## தூத்துக்குடி மாவட்டத்தில் வறட்சிப் பகுதிகளை பார்வையிட அரசு குழு இந்த வாரம் வருகை

தூத்துக்குடி மாவட்டத்தில் வறட்சிப் பகுதிகளைப் பார்வையிட அரசு அறிவித்துள்ள குழு இந்த வாரத்தில் வரவுள்ளதாக ஆட்சியர் ஆஷிஷ்குமார் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் கூறியதாவது:

தூத்துக்குடி மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக முதல்வர் அறிவித்துள்ளார். வறட்சிப் பகுதிகளைப் பார்வையிட முதல்வரால் அறிவிக்கப்பட்ட குழுவினர் இந்த வாரத்தில் வர உள்ளனர். இவர்கள் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் ஆய்வு செய்து வறட்சிப் பகுதிகளைக் கணக்கெடுத்து அறிக்கை தாக்கல் செய்ய உள்ளனர். அதன்பிறகு தூத்துக்குடி மாவட்டத்துக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டிய வறட்சி நிவாரணம் குறித்து முடிவு செய்யப்படும்.

நிலத்தடி நீர் எடுக்கத் தடை: தூத்துக்குடி மாவட்டத்தில் நிலத்தடி நீர் எடுப்பதற்குத் தடைவிதித்து கோட்டாட்சியர்கள் உத்தரவு பிறப்பித்துள்ளனர். அதனையும் மீறி நிலத்தடிநீரை எடுப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும், லாரிகள் பறிமுதல் செய்யப்படும். நிலத்தடி நீர் எடுக்க உரிமம் பெற வேண்டும். இது குடிநீருக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும். தொழிற்சாலைகளுக்கு தண்ணீர் எடுக்க அனுமதி கிடையாது என்றார்.

மேலும், தூத்துக்குடி- பாளையங்கோட்டை சாலையில் விவிடி சிக்னல் முடக்கப்பட்டுள்ளது

குறித்து ஆட்சியர் ஆஷிஷ்குமார் பதிலளிக்கையில், போக்குவரத்து அதிகாரிகள் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டு, அதன்பின் இது குறித்து முடிவு செய்யப்படும் என்றார் அவர்.

## முட்டை கொள்முதல் விலை வரலாறு காணாத உயர்வு

நாமக்கல் மண்டலத்தில் முட்டை பண்ணைக் கொள்முதல் விலை திங்கள்கிழமை ரூ.3.70 ஆக நிர்ணயிக்கப்பட்டது. இது வரலாறு காணாத விலையாகும்.

விலையேற்றம் காரணமாக, வட மாநிலங்களில் முட்டை நுகர்வு குறைந்தது. இதைத் தொடர்ந்து, கடந்த மாதம் நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை குறைக்கப்பட்டது. அதன்படி, ஜனவரி 23ஆம் தேதி ரூ.3.42 ஆக இருந்த முட்டைக் கொள்முதல் விலை, 24ஆம் தேதி ரூ.3.20 ஆகக் குறைக்கப்பட்டது.

பின்னர், குளிர் அதிகரித்ததால் தமிழகம், கேரளம் மற்றும் வட மாநிலங்களில் முட்டை விற்பனை அதிகரித்தது. இதனால், நாமக்கல் மண்டலத்தில் மீண்டும் முட்டை விலை உயரத் தொடங்கியது.

கடந்த ஜனவரி 31-ல் ரூ.3.30, பிப்ரவரி 4-ல் ரூ.3.45, பிப்ரவரி 7-ல் ரூ.3.55, பிப்ரவரி 9-ல் ரூ.3.65 என முட்டை விலை படிப்படியாக உயர்ந்தது. இந்த நிலையில், திங்கள்கிழமை மேலும் 5 காசுகள் உயர்த்தப்பட்டு ரூ.3.70 ஆக நிர்ணயிக்கப்பட்டது.

இது நாமக்கல் மண்டல வரலாற்றில் மிக அதிகபட்ச விலையாகும். இதற்கு முன்பு கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் அதிகபட்சமாக விலை ரூ.3.65 ஆக இருந்தது. தற்போது சந்தை நிலவரம் சாதகமாக இருப்பதால், இந்த விலை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு தெரிவித்தது.

பிற மண்டலங்களில் முட்டை விலை: சென்னை - ரூ.3.72, பெங்களூர் - ரூ.3.60, மைசூர் - ரூ.3.65, ஹைதராபாத் - ரூ.3.39, மும்பை - ரூ.3.72, விஜயவாடா - ரூ.3.39, கொல்கத்தா - ரூ.3.90, பர்வாலா - ரூ.3.46, தில்லி - ரூ.3.63.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

12.02.2013 A.M

## தேங்காய், வாழைப்பழம் விலை தொடர்ந்து உயர்வு

ஆண்டிபட்டி: மக்களின் அன்றாட உணவுப் பொருட்களில் மறைமுகமாக, முக்கிய இடம் பிடித்து வருவது தேங்காய் மற்றும் வாழைப்பழம். கோயில், மங்கல நிகழ்ச்சிகளில் தேங்காய், பழம் முக்கிய இடம் பிடித்துள்ளது. சமையலுக்கும் தேங்காய் தேவை அதிகம் உள்ளது. கோடை துவங்கும் முன்பே, இளநீர் பயன்பாடு அதிகரித்துள்ளது. தென்னந்தோப்புகளில் வியாபாரிகள் இளநீர் தேவைக்கு முன்கூட்டியே பணம் செலுத்தி பறித்து விடுகின்றனர்.இதனால், தேங்காய் உற்பத்தி குறைந்துள்ளது. இந்த ஆண்டு ஏற்பட்ட, குறைவான மழை பொழிவால் வாழை உற்பத்தியும் பாதிப்படைந்துள்ளது.வியாபாரிகள் கூறியதாவது:

தேனி மாவட்டத்தில் வாழை உற்பத்தி குறைந்ததால், தட்டுப்பாடு ஏற்பட்டு, விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்வதற்கான செலவும் கூடி உள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு இரண்டு ரூபாய்க்கு விற்ற வாழைப்பழம், தற்போது நான்கு ரூபாயாகவும், மூன்று ரூபாய்க்கு விற்ற பழம் ஐந்து ரூபாயாகவும் உயர்ந்துள்ளது. இதேபோல், கடந்த சில மாதங்களுக்கு முன்பு மூன்று ரூபாய்க்கு விற்ற தேங்காய் இன்று 8 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அடுத்தடுத்து வரும் மாதங்களில் கிராமங்களில் பொங்கல் திருவிழாக்கள் அதிகம் இருப்பதால், விலை உயர்வை தவிர்க்க வெளியிடங்களில் இருந்து, அதிக அளவில் கொண்டுவரப்பட வேண்டும்.

## முருங்கை "பீன்ஸ்' விலை சரிவு

வருஷநாடு:வருஷநாடு, வாலிப்பாறை பகுதிகளில் முருங்கை "பீன்ஸ்' விலை குறைந்துள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.வாலிப்பாறை, தும்மக்குண்டு ,முருக்கோடை, வண்டியூர், சிறப்பாறை பகுதிகளில் முருங்கை "பீன்ஸ்' சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த மாதம், தேனி சந்தையில் ஒரு கிலோ பீன்ஸ் 30 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தன. தற்போது கிலோ

10 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதால் விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர். முருங்கை பீன்ஸ் உற்பத்தி குறைவாக இருக்கும் பொழுது சரியான விலை கிடைக்கவில்லை. சந்தை விற்பனையில் இடைத்தரகர்களின் தலையீடு அதிகமாக இருப்பதால், விலை குறைந்து வருவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

### தேனி உழவர் சந்தையில் காய்கறி விலை சரிவு

தேனி:தேனி உழவர்சந்தையில் காய்கறிகளின் வரத்து அதிகரிப்பால் விலைகள் சரிந்துள்ளது.தேனி உழவர்சந்தையில் கடந்த வாரம் கிலோ 20 ரூபாய்க்கு விற்ற கத்தரி தற்போது கிலோ 12 ரூபாய்க்கும், அவரைக்காய் 10 ரூபாய்க்கும், தக்காளி 10 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. இது போல் அனைத்து காய்கறிகளின் விலைகளும் சிறிதளவு குறைந்துள்ளன. தோட்டத்து பாசனம் மூலம் காய்கறி விளைச்சல் பெருகி உள்ளதே இதற்கு காரணம். இதனால் வரத்து அதிகரித்துள்ளது என உழவர்சந்தை விவசாயிகள் தெரிவித்துள்ளனர். காய்கறி விலை நிலவரம், கிலோவிற்கு ரூபாயில்: வெண்டைக்காய்- 18, புடலங்காய் 18, பாகற்காய்- 24, முருங்கைக்காய்- 25, உருட்டு பச்சை மிளகாய்- 24, பீட்ரூட்- 14, நூக்கல்- 12, முள்ளங்கி- 10, முருங்கை பீன்ஸ்- 28, முட்டைக்கோஸ்- 10, காரட்- 25, பட்டாணி- 40, இஞ்சி- 48, பூண்டு- 30 முதல் 60, உருளைக்கிழங்கு- 20, கருணைக்கிழங்கு- 20, சேனைக்கிழங்கு- 20, சர்க்கரை வள்ளி கிழங்கு 18, வெற்றிலை வள்ளி கிழங்கு- 25, கருவேப்பிலை- 35, மல்லிதழை, 15, புதினா- 25, சின்ன வெங்காய ம்- 30, பெல்லாரி- 28, அரைக்கீரை- 15, கீரை வகைகள் 5, எலுமிச்சை 40.

### விவசாயிகள் குறைதீர் கூட்டம்

சிவகங்கை: ""சிவகங்கை கலெக்டர் அலுவலகத்தில், பிப்.,15 அன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறும்," என, கலெக்டர் ராஜராமன் தெரிவித்தார். அவர் கூறியதாவது:பிப்.,15 வெள்ளியன்று காலை 10.30 மணிக்கு துவங்கும் கூட்டத்தில், விவசாயிகள் பங்கேற்று துறை சார்ந்த குறைகளை தெரி விக்கலாம்,என்றார்.

### உறிக்காமல் கண்ணீரை வர வழைக்கும் வெங்காயம் விலை மீண்டும் கிடு.. கிடு...

தென்காசி:தென்காசி பகுதியில் வெங்காயம் விலை மீண்டும் கிடு... கிடு... என உயர்ந்துள்ளதால் பொதுமக்கள் பெரும் கவலையடைந்து வருகின்றனர்.

உணவு சமைப்பதற்காக அன்றாடம் பயன்படுத்தப்படும் பொருட்களில் வெங்காயத்துக்கு முக்கிய இடம் உண்டு.கடந்த 98ம் ஆண்டு வெங்காயத்தின் விலை ஏறுக்கு மாறாக உயர்ந்ததால் பா.ஜ. ஆட்சி செய்த டில்லியில் ஆட்சி மாற்றமே ஏற்பட்டது. அதே போல் வெங்காயம் விலை உயர்வு காரணமாக ராஜஸ்தான் மாநிலத்திலும் பா.ஜ. ஆட்சியை இழந்தது.

தற்போது டில்லியில் மீண்டும் வெங்காயம் விலை எகிறி வருவதால் டில்லியில் ஆட்சி செய்து வரும் காங்கிரஸ் அரசுக்கு பெரும் கலக்கம் ஏற்பட்டுள்ளது.
விரைவில் டில்லியில் சட்டசபை தேர்தல் நடக்க உள்ள நிலையில் வெங்காயத்தின் விலை உயர்வு தேர்தலில் எதிரொலித்து விடக்கூடாது என்பதில் டில்லி முதல்வர் ஷீலா தீட்ஷித் தீவிரமாக உள்ளார்.

தற்போது தென் மாவட்டப் பகுதிகளில் வெங்காயம் பயிரிடப்பட்டு வருகிறது. குறிப்பாக நெல்லை மாவட்டத்தில் ஆலங்குளம், மாறாந்தை அத்தியூத்து, கழுநீர்குளம், வீரகேரளம்புதூர், சுரண்டை, பாவூர்சத்திரம், மேலப்பாவூர், கீழப்பாவூர், ராஜபாண்டி, வெள்ளகால், நாகல்குளம், குறிச்சாம்பட்டி போன்ற பகுதிகளில் கிணற்று பாசனம் மூலம் வெங்காயம் பயிரிடப்பட்டு வந்தது.
ஆனால் தற்போது இப்பகுதியில் தென் மேற்கு பருவமழை மற்றும் வடகிழக்கு பருவமழை பொய்த்துவிட்ட நிலையில் இப்பகுதியில் உள்ள நீர் நிலைத் தேக்கங்களான ஆறு, ஏரி, குளம், அணை மற்றும் கிணறு வறண்ட நிலையில் காணப்படுவதால் நிலத்தடி நீரும் வெகுவாக குறைந்து விட்டது.

இதனால் பொதுமக்கள் குடிநீருக்கே அல்லல்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார். நெற்பயிர்களும் கருகிய நிலையில் காணப்படுகிறது.
இப்பகுதியில் ஒரு சில பகுதிகளில் மட்டுமே வெங்காயம் பயிரிடப்பட்டுள்ளது.
இதற்கு முன் பயிர் செய்த வெங்காயத்தை அறுவடை செய்தவர்கள் ஓரளவு விளைச்சலிருந்தும் வெங்காயத்திற்கு விலை இல்லாத காரணத்தால் வெங்காயம் மண்டி அமைத்து பாதுகாப்பாக பதுக்கி வைத்து விடுகின்றனர்.

இதன் காரணமாக வெங்காய விலையில் பெரிய அளவில் மாற்றம் ஏற்படுகிறது.மேலும் இப்பகுதியில் கடும் வறட்சி நிலவி வருவதாலும் விவசாயிகள் வெங்காயத்தை பயிரிட

முன்வராததாலும் வெங்காயம் கிலோ ஒன்றுக்கு தலா 40 ரூபாய் முதல் 50 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

வெங்காயத்தை உறித்தால்தான் கண்ணீர் வரும். ஆனால் விலையை கேட்டவுடனேயே வாடிக்கையாளர்களின் கண்களிலும் கண்ணீரை காணமுடிகிறது.வறட்சி காரணமாக வெங்காயம் பயிரிட முடியவில்லையே என விவசாயிகளும் ஆழ்ந்த கவலையடைந்து வருகின்றனர்.

## விதை முளைப்புத்திறன் பரிசோதனை பரிசோதனை அலுவலர் விளக்கம்

திருநெல்வேலி:பயறு வகை மாதிரிகளை முளைப்புத்திறன் பரிசோதனைக்கு அனுப்ப அலுவலர் அறிவுறுத்தினார்.

நெல்லை விதை பரிசோதனை அலுவலர் முகமதுகாசிம் அறிக்கை:

பயிர் வளர்வதற்கு ஏற்ற சூழ்நிலையில் விதையின் கரு முளை விட்டு வளர்ச்சிக்குரிய பாகங்கள் உருவாகி இயல்பான செடி ஆவதற்குரிய திறன் முளைப்புத்திறன் எனப்படும்.

முளைப்புத்திறனில் இயல்பானது, இயல்பற்றது, கடினமானது, உயிரற்றது என நான்கு வகைப்படுத்தி சோதனை முடிவு அறிவிக்கப்படும். கடின விதை என்பது விதை உறைகளின் கடினத்தன்மை காரணமாக நீர் உட்புக இயலாத காரணத்தால் முளை விடாமல் இருப்பதாகும். இவை பயறு வகை, வெண்டை விதைகளில் தனியாக கணக்கிடப்பட்டு ஆய்வு முடிவுகள் வழங்கப்படும். இவை வயல்களில் முளைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளதால் பயறு வகை, வெண்டை விதைகளில் மட்டும் கடின விதைகளின் எண்ணிக்கையும், இயல்பான நாற்றுக்களின் எண்ணிக்கையோடு சேர்த்து முளைப்புத்திறன் கணக்கிடப்படும்.

விவசாயிகள் தற்போது அறுவடையாகி வரும் பயறு வகை விதை மாதிரிகளை நெல்லை விதைப்பரிசோதனை ஆய்வகத்திற்கு அனுப்பி முளைப்புத்திறன் பரிசோதனை மூலம் கடின விதைகளின் எண்ணிக்கையை அறிந்து கொள்ளலாம்.

இவ்வாறு விதை பரிசோதனை அலுவலர் முகமதுகாசிம் தெரிவித்தார்.

## வயல் வெளிகளை தேடி வரும் பறவைகள்:குச்சிகள் நட்டு கட்டுப்படுத்தும் விவசாயிகள்

கிருஷ்ணகிரி: வயல்வெளிகளில் புழு, பூச்சிகளை தீனிக்காக பிடிக்க வரும் பறவைகளிடம் இருந்து பயிர்களை பாதுகாக்க வயல் வெளிகளில் குச்சிகளை நட்டு அதில் துணிகளை விவசாயிகள் கட்டி வருகின்றனர்.கிருஷ்ணகிரி மாவட்டத்தில், பருவமழை பொய்து போனதால், கடும் வறட்சி

ஏற்பட்டுள்ளது. குறிப்பாக மேட்டுப்பாங்கான நிலங்கள் அதிகம் உள்ள பர்கூர், மத்தூர், போச்சம்பள்ளி, வேப்பனப்பள்ளி சுற்று வட்டார பகுதியில் கடும் வறட்சி ஏற்பட்டு நிலங்களில் புல், பூண்டு கூட முளைக்காமல் வறண்டு காணப்படுகிறது. இங்கு சுற்றி திரியும் பறவைகளுக்கு கூட உணவுப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.கே.ஆர்.பி., அணையில் முதல் போக சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடாத நிலையில், கடந்த ஒரு மாதத்துக்கு முன் அணையில் இருந்து இரண்டாம் போக சாகுபடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. இதை கொண்டு அவதானபட்டி, பெரியமுத்தூர், மலையாண்டஅள்ளி, சுண்டேகுப்பம், தேர்பட்டி போன்ற பகுதியில் விவசாயிகள் நெல் சாகுபடி செய்துள்ளனர். தற்போது, நெல் பயிர் களையெடுக்கும் நிலையில் உள்ளது.

மாவட்டத்தில் மற்ற இடங்களில் பறவைகளுக்கு உணவுக்கு பஞ்சம் ஏற்பட்டுள்ளதால் நீர்பாங்கான நிலங்கள் உள்ள கே.ஆர்.பி., அணை பாசன பகுதியில் அதிக அளவில் கொக்கு, நாரை போன்ற பறவைகள் படையெடுத்து வருகின்றது. இவ்வாறு கூட்டம், கூட்டமாக வரும் பறவைகள் வயல்களில் உள்ள பூச்சிகளை தின்பதற்காக வயல்களில் அமர்கிறது. கூட்டமாக பறவைகள் நெல் வயல்களில் அமரும்போது பயிர்கள் சேதாரமாகிறது.இவ்வாறு சேதமடையும் பயிர்கள் வளராமல் களையெடுக்கும் பருவத்திலேயே காய்ந்து விடும். இதனால் மகசூல் வெகுவாக பாதிக்கும். பறவைகள் கூட்டத்தில் இருந்து நெல் பயிர்களை காப்பாற்ற விவசாயிகள் தங்கள் நெல் வயலில் துணிகளை குச்சியில் கட்டி நட்டு வைத்துள்ளனர்.

## வறட்சியின் பிடியில் விளைநிலங்கள்:கோபியில் விவசாயிகள் பரிதாபம்

கோபிசெட்டிபாளையம்: ஈரோடு மாவட்டத்தில் பருவமழை பொய்த்ததால், விளைநிலங்களில் பயிரிடப்பட்ட கரும்பை, மாடுகளுக்கு தீவனமாக்கும் அவல நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.ஈரோடு மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாகவே பருவமழை கை கொடுக்காததால், விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த, 2002ல், 792.30 மி.மீ., 2003ல், 847.20 மி.மீ., 2004ல், 768 மி.மீ., 2005ல், 1267.30 மி.மீ., 2006ல், 903 மி.மீ., 2007ல், 831.80 மி.மீ., 2008ல், 795 மி.மீ., 2009ல், 806 மி.மீ., 2010ல், 1246 மி.மீ., 2011ல், 959 மி.மீ., 2012ல், 544 மி.மீ மழையும் பெய்துள்ளது.

கோபி பகுதியில் சென்ற பத்து ஆண்டுகளாக சராசரியாக, 277 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. பருவமழை தவறியதால் பவானிசாகர் அணையின் நீர்மட்டம் குறைந்து வருகிறது. ஈரோடு மாவட்டத்தை பொறுத்தவரையில், பவானிசாகர் அணையின் மூலம் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, எல்.பி.பி., காலிங்கராயன் வாய்க்கால் ஆகிய பாசனங்கள்

பயன்பெறுகின்றன.பாசனப்பகுதியில், கரும்பு, மஞ்சள், வாழை, நெல் போன்றை முக்கிய பயிராக உள்ளன. நான்கு பாசனங்களிலும் ஒரு லட்சம் ஏக்கர் வரை கரும்பு பயிரிடப்படுகிறது. பதிவு செய்த கரும்பை தவிர, மற்ற கரும்புகளை, நாட்டு சர்க்கரை, அச்சு வெல்லம், உருண்டை வெல்ல உற்பத்திக்கு பயன்படுத்தப்படுகிறது.

சென்ற ஆண்டில் பருவமழை தவறியதால் பவானிசாகர் அணையில் இருந்து பாசனங்களுக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை. தடப்பள்ளி, அரக்கன்கோட்டையில் ஒரு போகத்துக்கும், எல்.பி.பி., வாய்க்காலில் உயிர் நீர்மட்டுமே திறக்கப்பட்டுள்ளது.கிணற்று பாசன விவசாயிகள் மட்டுமே, கரும்பு பயிரிட்டுள்ளனர். வறட்சியால் நிலத்தடி நீர் மட்டமும் வெகுவாக குறைந்துள்ளது. பல்வேறு இடங்களில், 60 முதல், 80 அடி ஆழ் குழாய் கிணறு வற்றியதால், விவசாயிகள் விழிப்பிதுங்கி செய்வதறியாமல் நிற்கின்றனர்.

விவசாயிகள் கூறுகையில்,"ஈரோடு மாவட்டத்தில் விவசாயத்தை முக்கிய தொழிலாக கொண்ட பகுதியாக கோபி மற்றும் சுற்றுவட்டார பகுதிகள் உள்ளது.நடப்பாண்டு பருவ மழை பொய்த்தால், அனைத்து பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயிகளும் பாதிக்கப்பட்டனர். பவானிசாகர் அணையில் இருந்த குறைந்தளவு நீரை பயன்படுத்தி தடப்பள்ளி, அரக்கன்கோட்டையில் முதல் போக நடவு முடிந்துள்ளது.

மழை இல்லாமல் இரண்டாம் போக சாகுபடி துவங்கவில்லை. வாய்க்காலில் தண்ணீர் இல்லாததால் கிணற்று பாசனம் மூலம் கரும்பு பயிரிடப்பட்டது. முதல் அறுவடை செய்யப்பட்ட பிறகு, கட்டை கரும்பு வளர்க்கப்பட்டது. வறட்சியால் கரும்பு வீணாவதை விட, மாடுகளுக்கு தீவனமாக இருக்கட்டும் என மேய்ச்சலுக்கு விட்டுள்ளோம்,' என்றனர்.

## கோழி குஞ்சு விற்பனையில் லாபம்: வேலை இளைஞர்கள் புதிய முயற்சி

பந்தலூர்:பந்தலூர், கூடலூர் பகுதியில் கோழி குஞ்சு விற்பனை "சூடுபிடித்துள்ளதால்' வேலையில்லா இளைஞர்கள் பலர்<, இந்த தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

கூடலூர், பந்தலூர் பகுதிகளில் விவசாயம் மட்டுமின்றி,பிற தொழில்களிலும் வேலையில்லாத இளைஞர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதில் பலர் தர்மபுரி, கோவை ஆகிய பகுதிகளிலிருந்து கோழி குஞ்சுகளை மொத்தமாக வாங்கி வந்து, மொபட்டில் வைத்து விற்பனை செய்து, லாபம் சம்பாதித்து வருகின்றனர். பந்தலூர் அருகே எருமாடு பகுதியில், கூடாரம் அமைத்து, ஒரு ஜோடி கோழி குஞ்சுகள் 100 ரூபாய்க்கு விற்பனை செய்கின்றனர். இந்த தொழிலில் 12 இளைஞர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இது குறித்து அவர்கள் கூறுகையில்," இந்த தொழிலில் பெரிய லாபம் இல்லாவிட்டாலும், வேலையில்லாமல் இருப்பதை விட, சுய தொழிலாக இதனை செய்ய எண்ணி, கோழி குஞ்சு வியாபாரத்தை துவங்கினோம். தற்போது, மாதத்திற்கு ஒருமுறை 12 ஆயிரம் கோழி குஞ்சுகளை கொண்டு வருகிறேன். எங்களின் வியாபாரம் நல்ல நிலையில் நடந்தால், பல இளைஞர்களுக்கும் பணி தரவும் வாய்ப்பு ஏற்படும்' என்றனர். இந்த இளைஞர்களை உள்ளூர் மக்களும் ஊக்கப்படுத்தி வருகின்றனர்.

## தெளிப்பு நீர் பாசனத்தில் சம்பங்கி சாகுபடி

காஞ்சிபுரம்:தெளிப்பு நீர் பாசனத்தில் சம்பங்கிபூ சாகுபடி செய்வதன் மூலம், நல்ல லாபம் பார்க்க முடிகிறது என, சேந்தமங்கலத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் - அரக்கோணம் சாலையில் உள்ளது சேந்தமங்கலம். இக்கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ஏழுமலை,38. இவர் தெளிப்பு நீர் பாசனம் மூலம், "பிரிஞ்சிவால் ஹை பிரீட்' ரக சம்பங்கிபூ சாகுபடி செய்துள்ளார். நடவு செய்த, 90வது நாள் முதல் பூக்கத் துவங்கும், நன்கு பராமரிக்கப்பட்டால், நான்கு ஆண்டுகள் வரை தொடர்ந்து பூக்கும்.

பாசன அமைப்பு

ஐந்து அடி உயரத்தில் பைப்புகள் நின்ற நிலையில் பொருத்தி, அதன் மேல் பகுதியில், தண்ணீர் வெளியில் வரும் கையில், "பட்டர்பிளை ஸ்பிங்லர்' சுழல்கள் அமைக்கப்பட்டிருக்கும். குழாய்கள் மூலம் தண்ணீர் பாய்ச்சும் போது, பட்டர்பிளை ஸ்பிங்லர் சுழன்று தண்ணீரை தூவும்.

சம்பங்கி சாகுபடிக்கு நிலத்தில் லேசான ஈரப்பதம் இருந்தால் மட்டும் போதும், செடி வீரியமாக வளரும். பட்டர்பிளை ஸ்பிங்லர் அமைக்க ஏக்கருக்கு, 35 ஆயிரம் ரூபாய் செலவாகும். நடவு செய்த அதே ஆண்டில் லாபத்தை ஈட்ட முடியாது.

இதுகுறித்து விவசாயி ஏழுமலை கூறுகையில், "வெளியூர் சென்றபோது, அங்கு தெளிப்பு நீர் பாசனத்தில் சம்பங்கி சாகுபடி செய்வதை பார்த்தேன். இதனால், அதேமுறையில் சாகுபடி செய்ய வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது.

இதற்கான, "பிரிஞ்சிவால் ஹை பிரீட்' ரக சம்பங்கி விதையை வாங்கி வந்து நடவு செய்தேன். இதற்கான செலவு, மற்ற பயிர்களைவிட கூடுதலாக தான் உள்ளது என்றாலும், லாபமும் அதிகம் தான்.

அதிக லாபம்

மேலும், பூவின் அளவும் பெரியதாகவே உள்ளது. அறுவடை செய்யப்படும் பூ, கிலோ 60 ரூபாய்

முதல் சந்தை நிலவரத்திற்கு ஏற்றவாறு விற்பனைக்காக காஞ்சிபுரத்திற்கு அனுப்பி வைக்கிறேன். முகூர்த்த நாட்கள், திருவிழாக் காலங்களில், கிலோ 250 ரூபாய் வரையில் விற்கிறேன்.
இந்த சாகுபடி முடிந்து, வேறு பயிரை சாகுபடி செய்ய வேண்டும் என்றால், தெளிப்பு நீர் பைப்புகளை சேதாரமில்லாமல் அகற்றிவிட்டு, நிலத்தை நன்கு உழுதபின் மீண்டும் பொருத்திக் கொள்ளலாம். இந்த தெளிப்பு நீர் பாசனத்தில், அனைத்து விதமான பயிர்களை சாகுபடி செய்யலாம்,' என்றார்.

## மிருகண்டா அணையில்பாசனத்துக்கு நீர் திறப்பு

திருவண்ணாமலை: கலசப்பாக்கம் அருகே மிருகண்டா அணையிலிருந்து பாசனத்திற்கு நேற்று நீர் திறந்துவிடப்பட்டது.கலசப்பாக்கம் அடுத்த மிருகண்டா நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள மிருகண்டா அணையின் நீர் முழு கொள்ளவு, 22.73 அடியாகும், தற்போது தண்ணீர் இருப்பு, 12.36 அடியாக உள்ளது அதாவது,37.14 மில்லியன் கன அடி உள்ளது. தமிழக அரசு அப்பகுதி விவசாயிகள் பாசன வசதி பெறும் வகையில் நேற்று முன்தினம் முதல் வரும், 18ம் தேதி வரை, 8 நாட்களுக்கு நீர் திறந்துவிட உத்தரவிட்டது. இதன்படி அமைச்சர் முக்கூர் சுப்பிரமணியன் அணையிலிருந்து நேற்று முன்தினம் நீரை திறந்து வைத்தார். கலெக்டர் விஜய் பிங்ளே உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## செஞ்சி பகுதி விவசாய கிணறுகளில் நீர் மட்டம்... டேங்கர் தண்ணீர் மூலம் பயிரை காப்பாற்ற முயற்சி

செஞ்சி:செஞ்சி பகுதியில் கிணறுகளில் நீர் மட்டம் வேகமாக குறைந்து வருவதால் நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர். சாகுபடி செய்த பயிரை காப்பாற்ற முடியுமா என்ற சந்தேகம் விவசாயிகளிடம் எழுந்துள்ளது.
தமிழகத்தின் நெல் உற்பத்தியில் விழுப்புரம் மாவட்டம் முதல் இடத்தில் உள்ளது. மொத்த நெல் உற்பத்தியில் 8.2 சதவீதம் விழுப்புரம் மாவட்டத்தில் விளைகிறது. காவிரி டெல்டா மாவட்டங்களான நாகை, திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டங்கள் இதற்கு அடுத்த இடத்திலேயே உள்ளன.
விழுப்புரம் மாவட்டத்தில் மொத்த விவசாய சாகு படியில் 43.3 சதவீதம் நெல் சாகுபடி செய்கின்றனர்.
காவிரி டெல்டா மாவட்டங்களை போல் வாய்க்கால் பாசனம் இல்லை என்றாலும் ஏரி மற்றும் கிணற்று பாசனம் மூலம் நெல் உற்பத்தியில் முதல் இடத்தை விழுப்புரம் மாவட்டம் தக்க வைத்து

வருகிறது.

வழக்கமாக ஆகஸ்ட் மாதம் துவங்கி நவம்பர் மாதம் வரை சம்பா சாகுபடி நடக்கும். கடந்த நவம்பர் மாதம் பருவ மழை தீவிரமாக இருந்த போது, தொடர்ந்து மழை பெய்யும் என நம்பி செஞ்சி பகுதியில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் நெல் நடவு செய்தனர்.

விவசாயிகளின் எதிர்பார்ப்பிற்கு மாறாக பருவமழை பொய்த்து போனது. பெரும் பகுதி ஏரிகளுக்கு பாதியளவு கூட தண்ணீர் வரவில்லை.

ஏரியை நம்பி பாசனம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. கிணற்று பாசனம் மூலம் பயிரிட்டவர்களுக்கும் துவக்கத்தில் மின்சாரம் இன்றி பயிர்கள் காய்ந்தன. பல இடங்களில் விவசாயிகள் சாலை மறியல்

நடத்தினர்.

இதன் பின்னர் ஓரளவிற்கு மின் விநியோகம் சீரடைந்தது. விவசாயிகளுக்கு அடுத்த சோதனையாக கடந்த சில நாட்களில் கிணறுகளின் நீர் மட்டம் திடீரென வேகமாக குறைந்து வருகிறது.

ஏரி, குளம் உள்ளிட்ட நீர் நிலைகளில் தண்ணீர் இல்லாத நிலையில் செஞ்சி பகுதியில் நிலத்தடி நீரின் பயன்பாடு அதிகரித்துள்ளது.

புதிய தொழிற்சாலைகள், ஏராளமான புதிய கட்டுமான பணிகள், திருமண மண்டபம், உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள், தனியார் கல்லூரிகளில் இயங்கி வரும் விடுதிகள் என தண்ணீர் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துள்ளது.

இதற்காக உறிஞ்சப்படும் நிலத்தடி நீரினால் செஞ்சி பகுதியில் உள்ள கிணறுகளின் நீர் மட்டம் வேகமாக குறைந்து வருகிறது. நீர் மட்டம் குறைந்து வருவதால் பயிரிடப்பட்டுள்ள நெல் பயிர்களை காப்பாற்ற முடியுமா என விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர்.

இவர்களுக்கு சாகுபடி செய்த பயிரை காப்பாற்ற முடியுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. சில விவசாயிகள் சாகுபடி செய்துள்ள பயிரில் ஒரு பகுதியை கைவிட்டு, ஒரு பகுதி பயிரை மட்டும் காப்பாற்ற முடிவு செய்துள்ளனர்.

டேங்கர் மூலம் தண்ணீர்...

அண்ணமங்கலம் கிராமத்தை சேர்ந்த விவசாயி ஏழுமலை கடந்த நவம்பர் 30 ம் தேதி 3.50 ஏக்கர் நிலத்தில் ஏடிடி 45 நெல் நடவு செய்தார். இது கதிர் முற்றிய நிலையில் கிணற்றில் தண்ணீர் மட்டம் வேகமாக குறைந்தது.இதனால் டேங்கர் மூலம் தண்ணீர் இறைத்து பயிரை காப்பாற்றும் முயற்சியில் இறங்கி உள்ளார். அடுத்த சில நாட்களில் இதே நிலை மேலும் சில விவசாயிகளுக்கு

ஏற்படும் வாய்ப்புள்ளது.ஏமாற்றும் பருவ மழைகடந்த 2010 ம் ஆண்டு டிசம்பர் மாத மத்தியில் திடீரென கொட்டிய கன மழையினால் செஞ்சி தாலுகாவின் பல பகுதிகளில் வெள்ள பெருக்கு ஏற்பட்டது. ஏராளமான பயிர்கள் நீரில் மூழ்கின.

2011ம் ஆண்டு டிசம்பர் 30ம் தேதி தானே புயலினால் பருவ மழை தீவிரமடைந்தது.

இதே போல் டிசம்பர் மாதம் மழை பெய்யும் என எதிர்பார்த்த விவசாயிகளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

## பூமாரி கிராமத்தில் கால்நடை முகாம்

திருக்கோவிலூர்:திருக்கோவிலூர் அடுத்த பூமாரி கிராமத்தில் கால்நடை பராமரிப்பு துறை சார்பில் மலடுநீக்க சிகிச்சை முகாம் நடந்தது.

பூமாரி கிராமத்தில் அரசால் வழங்கப்பட்ட கால்நடைகளுக்கு மலடுநீக்க சிறப்பு சிகிச்சை முகாம் நடந்தது. ஊராட்சி தலைவர் கிருஷ்ணமூர்த்தி வரவேற்றார்.

கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மைய துணை பேராசிரியர் வேங்கடபதி தலைமை தாங்கினார். உதவி பேராசிரியர் சரத், உதவி மருத்துவர்கள் ஆலமரத்தான், மகேஷ், பாலமுருகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முகாமில், 48 மாடுகளுக்கு மலடு நீக்க சிகிச்சையும், 150 பசுக்களுக்கு குடல்புழு நீக்கம், 32 பசுக்களுக்கு சினை பரிசோதனை, 32 மாடுகளுக்கு தாதுஉப்பு கலவை வழங்கப்பட்டது.

கால்நடை மருத்துவர்கள் மணிகண்டன், கருப்பண்ணன், ஆவின் கால்நடை உதவி மருத்துவர் ஜீவா ஆகியோர் சிகிச்சை அளித்தனர்.கோட்ட உதவி இயக்குனர் குபேந்திரன், கால்நடை ஆய்வாளர் முனியாண்டி, கால்நடை பராமரிப்பு உதவியாளர் பொம்மி, சத்தியவாணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தமிழகத்துக்கு 15 லட்சம் டன் நெல் வருகை:மின்தடையால் அரிசி உற்பத்தியில் பாதிப்பு

சேலம்: ""வடமாநிலங்களில் இருந்து தமிழகத்துக்கு, 15 லட்சம் டன் வரை நெல் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில், மேலும், 20 லட்சம் டன் நெல் விரைவில் தமிழகம் வர உள்ளதாகவும், மின் தடையால் ஆலைகளில் அரிசி உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது," என, தமிழக நெல் அரிசி வணிக சம்மேளனத்தின் மாநில துணைத் தலைவர் சியாமளநாதன் கூறினார்.

இது குறித்து அவர் கூறியதாவது:தமிழகத்தின் டெல்டா மாவட்டங்களில், நெல் விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டதால், நெல்லுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த தட்டுப்பாடு அப்படியே அரிசி விலையில் எதிரொலித்ததால், அதன் விலையிலும் எதிரொலித்துள்ளது. அரிசி விலை உயர்வை தடுக்கும் வகையில், ஆலை அதிபர்கள் வடமாநிலங்களில் இருந்து நெல்லை கொள்முதல் செய்து வந்ததால், அரிசி விலை கட்டுக்குள் இருந்து வருகிறது.தமிழகத்தின் நெல் தட்டுப்பாட்டை அகற்றும் வகையில், அரிசி ஆலை உரிமையாளர்கள், வியாபாரிகள் மத்தியபிரதேசம், மஹாராஷ்டிரா, ஒடிசா, சட்டீஸ்கர், உத்திரபிரதேச மாநிலம் லுதியானா ஆகிய இடங்களில் இருந்து நெல்லை கொள்முதல் செய்து, அரிசி உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர்.
இது வரை, வடமாநிலங்களில் இருந்து தமிழகத்துக்கு, 15 லட்சம் டன் நெல் கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும், 20 லட்சம் டன் நெல் விரைவில் தமிழகம் வர உள்ளது. வெளி மாநிலங்களில் இருந்து நெல்லை தமிழகத்துக்கு கொண்டு வரும் நிலையில், லாரிகளை மடக்கி பிடிக்கும் அதிகாரிகள் சிறிய குறைகளுக்காக, ஆயிரக்கணக்கில் வசூல் செய்கின்றனர்.தமிழக மக்களுக்கு தட்டுப்பாடு இல்லாமல் அரிசி வழங்கவும், அதே நேரத்தில் மக்களுக்கும், அரசுக்கும் பாலமாக செயல்பட்டு, அரிசி விலையை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டு வரும், எங்களிடம் அதிகாரிகள் வசூலில் ஈடுபடுவதை, தமிழக அரசு தடுத்து நிறுத்த வேண்டும்.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், தமிழகத்தில் நெல் விலை உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டு, இதே கால கட்டத்தில், கர்நாடகா டீலக்ஸ் நெல், கிலோ, 14 ரூபாய்க்கு விற்றது, 24 ரூபாய்க்கும், கிராந்தி கார், 13.50 ரூபாய்க்கு விற்றது, 19 ரூபாய்க்கும், பி.பி.டி., (பாபத்லால் பொன்னி) 12.50 ரூபாய்க்கு விற்றது, 20.50 ரூபாய்க்கும், ஏ.டி.டி., 37 ரகம், 12 ரூபாய்க்கு விற்றது, 18 ரூபாய்க்கும் விற்கிறது.நெல் விலை உயர்ந்துள்ள நிலையில், மின் தடை, அரிசி ஆலைகளுக்கு மேலும் ஒரு தலைவலியை கொடுத்து வருகிறது. தமிழகத்துக்கு நெல் வந்த போதிலும், மின்சாரம் கிடைக்காததால், நாள் ஒன்றுக்கு, 16 ஆயிரம் மூட்டை அரிசியை உற்பத்தி செய்து வந்த ஹைடெக் அரிசி ஆலைகள், தற்போது, 8,000 மூட்டை அரிசி மட்டுமே உற்பத்தி செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.
அரிசி ஆலைகளில், 1,200 மூட்டை அரிசி உற்பத்திக்கு, 350 கே.வி., முதல், 400 கே.வி., மின்சாரம் தேவைப்படுகிறது. இந்த மின்சாரத்தை தங்கு தடையின்றி வழங்கினாலே, அரிசி உற்பத்தி அதிகரிக்கும்.நெல் விலை உயர்வு, வாகன போக்குவரத்து செலவு அதிகரிப்பு, மின் தடையால் உற்பத்தியில் பாதிப்பு, கூடுதல் மின் கட்டண செலவு, ரயில்களில் நெல்லுக்கான வாடகை, 20 சதவீதம் அதிகரிப்பு ஆகியவற்றின் காரணமாகவே, அரிசி விலை தொடர்ந்து உயர்ந்து

வருகிறது.தமிழக அரசு, அரிசி ஆலைகளுக்கு தடையில்லா மின்சாரம் வழங்குவதோடு, வெளி மாநிலங்களில் இருந்து கொண்டு வரப்படும் நெல்லுக்கான, கெடு பிடிகளை தளர்த்தினால், அரிசி விலையை கட்டுப்படுத்த முடியும்.இவ்வாறு அவர் கூறினார்.நேற்றைய நிலவரப்படி அரிசி விலை(கிலோ) விபரம் :வெள்ளை பொன்னி பழசு, 56 ரூபாய் , புதுசு, 53, கர்நாடகா சோனா பொன்னி,50, பி.பி.டி., (பாபத்லால்) பொன்னி பழசு, 53, புதுசு,51, கர்நாடகா டீலக்ஸ், 51 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

## பண்ணையாளர் மகிழ்ச்சிமுட்டை விலை:வரலாறு காணாத உயர்வு

நாமக்கல்: தமிழகம், கேரளாவில், முட்டை விலை, 370 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 365 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, ஐந்து காசுகள் ஏற்றம் கண்டு, 370 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. வரலாறு காணாத அளவில், 370 காசாக ஏற்றம் கண்டிருப்பது, கோழிப் பண்ணையாளர்கள் மத்தியில், மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசு) நிலவரம்:சென்னை, 362, பெங்களூரு, 360, மைசூரு, 365, ஹைதராபாத், 339, மும்பை, 372, விஜயவாடா, 339, கோல்கத்தா, 390, பார்வாலா, 346, டில்லி, 363.இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## வேளாண் துறை சார்பில்ரூ.25 லட்சம் மதிப்பு:நவீன கருவி வழங்கல்

பள்ளிபாளையம்: பள்ளிபாளையம் யூனியன், புதுப்பாளையம் பஞ்சாயத்தில், விவசாயிகளுக்கு, வேளாண் துறை சார்பில், நவீன கருவிகள் வழங்கும் விழா நடந்தது.

நாமக்கல் மாவட்ட கலெக்டர் ஜகந்நாதன் தலைமை வகித்தார். யூனியன் சேர்மன் செந்தில், நகராட்சி சேர்மன் வெள்ளியங்கிரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழக தொழில் துறை அமைச்சர் தங்கமணி, 39 விவசாயிகளுக்கு, 25 லட்சம் ரூபாய் மதிப்புள்ள டிராக்டர், நெல் அறுவடை இயந்திரம், மருந்து தெளிப்பான், நடவு மற்றும் களை எடுப்பு இயந்திரம் ஆகிய கருவிகளை வழங்கி பேசினார்.அதை தொடர்ந்து, செய்தி மக்கள் தொடர்பு துறை மூலம், மருத்துவம், வேளாண், தோட்டக்கலை, கால்நடை பராமரிப்பு துறை மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை மூலம் அமைக்கப்பட்ட கண்காட்சியை, அமைச்சர் திறந்து வைத்து பார்வையிட்டார்.பள்ளிபாளையம் நகராட்சி

துணைத்தலைவர் சுப்ரமணி, யூனியன் கவுன்சிலர் கந்தசாமி, அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.

### 2,826 பருத்தி மூட்டைரூ.48 லட்சத்துக்கு ஏலம்

ராசிபுரம்: வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தில், நேற்று நடந்த பருத்தி ஏலத்தில், 2,826 மூட்டைகள், 48 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கம் (ஆர்.சி.எம்.எஸ்.,) கவுண்டம்பாளையம் குடோனில், திங்கட்கிழமைதோறும் பருத்தி ஏலம் நடக்கிறது. அதன்படி, நேற்று நடந்த ஏலத்தில், 20க்கும் மேற்பட்ட வியாபாரிகள் பங்கேற்றனர். ரகசிய டெண்டர் முறையில் ஏலம் நடந்தது.

பட்டணம், முத்துகாளிப்பட்டி, கைலாசம்பாளையம், வேலம்பாளையம், கதிராநல்லூர், குருசாமிபாளையம், சீராப்பள்ளி, தண்ணீர்பந்தல்காடு, ஜேடர்பாளையம், பெரம்பலூர், ஏர்வாடி, புளியங்குறிச்சி, துறையூர், மணிவிழுந்தான்காலனி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து, 100க்கும் மேற்பட்ட விவசாயிகள், சாகுபடி செய்த பருத்திகளை, ஏலத்துக்கு கொண்டு வந்தனர்.அதன்படி, ஆர்.சி.ஹெச்., பருத்தி, 1,575ம், டி.சி.ஹெச்., 1,251 என, மொத்தம், 2,826 மூட்டைகள் ஏலத்தில் குவிக்கப்பட்டது.

அதில், டி.சி.ஹெச்., ரகம் அதிக பட்சம், 5,346, குறைந்த பட்சம், 4,807 ரூபாய்க்கும், ஆர்.சி.ஹெச்., ரகம் அதிக பட்சம், 4,369, குறைந்த பட்சம், 3,920 ரூபாய்க்கும் ஏலம் போனது.நாமக்கல, சேலம், கொங்கணாபுரம், திருச்செங்கோடு, அவினாசி, அன்னூர், அருப்புக்கோட்டை, விருதுநகர், ஆத்தூர், தொடாவூர் ஆகிய பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் பங்கேற்று, பருத்தியை ஏலம் எடுத்தனர். நேற்று நடந்த ஏலத்தில், 48 லட்சம் ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது.

### சீரான விலையில் தக்காளி: விவசாயிகள் மகிழ்ச்சி

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாக சீரான விலையில் தக்காளி விலை இருப்பதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.விவசாயத்தை பிரதானமாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில், மேட்டுப்பாங்கான நிலங்கள் அதிக அளவில் உள்ளது. மேட்டுப்பாங்கான பகுதியில் இறவை பாசனம் மூலம் காய்கறி பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. தர்மபுரி, பென்னாகரம், பாலக்கோடு ஆகிய தாலுகாவில் அதிக அளவில் தக்காளி சாகுபடி செய்யப்படுகிறது.

வீரிய ஒட்டு ரக தக்காளிகள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இந்த ரகங்கள் அதிக மகசூல் கிடைப்பதோடு, நாட்டு ரக தக்காளியை விட சேதாரம் குறைவாக உள்ளது. வீரிய ரக தக்காளி சாகுபடியில் விவசாயிகள் அதக கவனம் செலுத்தி வருகின்றனர்.

இங்கு உற்பத்தியாகும் தக்காளி தென் மாவட்டங்களுக்கும், சென்னை உள்ளிட்ட பகுதிகளுக்கும் அதிக அளவில் விற்பனைக்கு செல்லும். தென் மாவட்டங்களில் இருந்து வியாபாரிகள் தக்காளியை தர்மபுரி மாவட்டத்தில் கொள்முத் செய்து லாரிகளில் எடுத்து செல்கின்றனர்.

தக்காளி சாகுபடி மற்றும் விற்பனையை கருத்தில் கொண்டு பாலக்கோடு மற்றும் பென்னாகரம் ஆகிய பகுதியில் தக்காளிக்கு பிரத்தியோக சந்தையுள்ளது.

இங்கு விவசாயிகள் தினம் தக்காளியை கொண்டு வந்து நேரடி ஏல முறையில் விற்பனை செய்கின்றனர்.கடந்த இரு மாதமாக தக்காளி விலை சீரான நிலையில் இருப்பதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கடந்த இரு மாதங்களில் தக்காளி விலை கிலோவுக்கு எட்டு ரூபாய் இருந்து, 10 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

சீரான விலையில் தக்காளி இருப்பதால், விற்பனைகும் ஒரே நிலையில் உள்ளது. தற்போது, பனி காற்றின் தாக்கம் குறைந்துள்ள நிலையில், தக்காளி பயன்பாடு அதிகரிக்க துவங்கியுள்ள நிலையில், சந்தைக்கு விற்பனைக்கு வரும் தக்காளிகள் வீணாகாமல் விற்பனை செய்யப்படுவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

### தக்காளி பண்ணைப்பள்ளி

பாப்பிரெட்டிப்பட்டி: பாப்பிரெட்டிப்பட்டி தாலுகா, பையர்நத்தம் கிராமத்தில், அட்மா திட்டத்தின் கீழ் தக்காளி பண்ணைப்பள்ளி துவக்கப்பட்டது.தோட்டக்கலை உதவி இயக்குனர் (பொ)ராமசாமி, பண்ணைப்பள்ளியை துவக்கி வைத்தார். தக்காளியில் புதிய வீரிய ஒட்டு ரகங்கள், பஜ்ஜியும், அதை பயிரிடும் முறை குறித்தும், சொட்டு நீர் பாசனத்தின் நன்மைகள் குறித்தும், விவசாயிகளுக்கு வேளாண் துறையினர் விளக்கினர்.வட்டார தொழில் நுட்ப மேலாளர் ரவி, மண் மாதிரி எடுத்தலின் அவசியம் குறித்தும், உரமிடுதல் குறித்தும் விளக்கினார். அப்பகுதியை சேர்ந்த, 25 விவசாயிகள் இதில் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை சண்முகம், தொழில் நுட்ப மேலாளர் வசந்தி ஆகியோர் செய்திருந்தனர்.

## மானிய விலையில் வேளாண் கருவிகள்

தர்மபுரி: தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள் மற்றும் இயந்திரங்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது.கலெக்டர் லில்லி வெளியிட்ட அறிக்கை:தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள் மற்றும் இயந்திரங்கள் மானிய விலையில் வேளாண்மை பொறியியல் துறை மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

நடப்பாண்டில், ஏற்கனவே தர்மபுரி மாவட்டத்துக்கு, 36 லட்சத்து, 80 ஆயிரம் ரூபாய் மானியம் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டு, வேளாண் கருவிகள் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஏப்ரல் மாதம் அனைத்து கிராமங்களில் நடந்த உழவர் பெருவிழாவின் போது, நவீன வேளாண் கருவிகள் செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.சம்பந்தப்பட்ட விழா நடந்த இடத்தில் விவசாயிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டது. பெறப்பட்ட விண்ணப்பங்கள் அடிப்படையில், விவசாயிகளின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில், மினி டிராக்டர், கதிரடிக்கும் இயந்திரம், ரோட்டோவேட்டர், கலப்பைகள் உள்ளிட்ட வேளாண் கருவிகள், இயந்திரங்கள் கூடுதல் தேவ குறித்து அரசுக்கு முன் மொழிவுகள் அனுப்பபட்டது.இதன் அடிப்படையில், இரண்டாம் கட்டமாக தர்மபுரி மாவட்டத்துக்கு, ஒரு கோடியே, 80 லட்சத்து, 45 ஆயிரம் ரூபாய் நிதி கூடுதலாக பெறப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீட்டில் விவசாயிகளால் அதிகம் விரும்பபடுகின்ற மினி டிராக்டர் இதர விவசாயிகளுக்கு ஒரு லட்சத்து, 25 ஆயிரம் ரூபாய் மானியத்திலும், ஆதி திராவிட விவசாயிகளுக்கு ஒரு லட்தச்து, 50 ஆயிரம் மானியத்திலும் வழங்க ஏதுவாக 73 வாகனங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், அனைத்து விதமான நவீன வேளாண் கருவிகள், இதர விவசாயிகளுக்கு, 50 சதவீதம் அளவிலும், ஆதி திராவிட விவசாயிகளுக்கு, 60 சதவீத மானிய விலையிலும் கருவிகள் வழங்கப்பட்டு வருகிறது. தேவையான நிதி ஒதுக்கீடு தயார் நிலையில் உள்ளதால், எந்தவித காத்திருப்பும் இல்லாமல் உடனடியாக அனைத்து வகையான வேளாண் கருவிகள், இயந்திரங்கள் வழங்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகள் இந்த வாய்ப்பை உடன் பயன்படுத்தி கொண்டு, அரசின் உதவிகளை பெற்ற கொள்ளலாம். மேலும் விபரங்கள் பெற விவசாயிகள், "செயற்பொறியாளர் (வே.பொ), கலெக்டர்

அலுவலக வளாகம், தர்மபுரி' உதவி செயற்பொறியாளர் (வே.பொ) தர்மபுரி மற்றும் உதவி செயற்பொறியாளர் (வே.பொ) அரூர் ஆகிய அலுவலங்களை அணுகி தெரிந்து கொள்ளலாம்.இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## பண்ணையாளர் மகிழ்ச்சிமுட்டை விலை:வரலாறு காணாத உயர்வு

நாமக்கல்: தமிழகம், கேரளாவில், முட்டை விலை, 370 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 365 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, ஐந்து காசுகள் ஏற்றம் கண்டு, 370 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. வரலாறு காணாத அளவில், 370 காசாக ஏற்றம் கண்டிருப்பது, கோழிப் பண்ணையாளர்கள் மத்தியில், மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசு) நிலவரம்:சென்னை, 362, பெங்களூரு, 360, மைசூரு, 365, ஹைதராபாத், 339, மும்பை, 372, விஜயவாடா, 339, கோல்கத்தா, 390, பார்வாலா, 346, டில்லி, 363.இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## தமிழகத்துக்கு 15 லட்சம் டன் நெல் வருகை:மின்தடையால் அரிசி உற்பத்தியில் பாதிப்பு

சேலம்: ""வடமாநிலங்களில் இருந்து தமிழகத்துக்கு, 15 லட்சம் டன் வரை நெல் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில், மேலும், 20 லட்சம் டன் நெல் விரைவில் தமிழகம் வர உள்ளதாகவும், மின் தடையால் ஆலைகளில் அரிசி உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது," என, தமிழக நெல் அரிசி வணிக சம்மேளனத்தின் மாநில துணைத் தலைவர் சியாமளநாதன் கூறினார்.

இது குறித்து அவர் கூறியதாவது:தமிழகத்தின் டெல்டா மாவட்டங்களில், நெல் விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டதால், நெல்லுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த தட்டுப்பாடு அப்படியே அரிசி விலையில் எதிரொலித்ததால், அதன் விலையிலும் எதிரொலித்துள்ளது. அரிசி விலை உயர்வை தடுக்கும் வகையில், ஆலை அதிபர்கள் வடமாநிலங்களில் இருந்து நெல்லை கொள்முதல் செய்து வந்ததால், அரிசி விலை கட்டுக்குள் இருந்து வருகிறது.தமிழகத்தின் நெல் தட்டுப்பாட்டை அகற்றும் வகையில், அரிசி ஆலை உரிமையாளர்கள், வியாபாரிகள் மத்தியபிரதேசம், மஹாராஷ்டிரா, ஒடிசா, சட்டீஸ்கர், உத்திரபிரதேச மாநிலம் லுதியானா ஆகிய இடங்களில் இருந்து நெல்லை கொள்முதல் செய்து, அரிசி உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது வரை, வடமாநிலங்களில் இருந்து தமிழகத்துக்கு, 15 லட்சம் டன் நெல் கொண்டு

வரப்பட்டுள்ளது. மேலும், 20 லட்சம் டன் நெல் விரைவில் தமிழகம் வர உள்ளது. வெளி மாநிலங்களில் இருந்து நெல்லை தமிழகத்துக்கு கொண்டு வரும் நிலையில், லாரிகளை மடக்கி பிடிக்கும் அதிகாரிகள் சிறிய குறைகளுக்காக, ஆயிரக்கணக்கில் வசூல் செய்கின்றனர்.தமிழக மக்களுக்கு தட்டுப்பாடு இல்லாமல் அரிசி வழங்கவும், அதே நேரத்தில் மக்களுக்கும், அரசுக்கும் பாலமாக செயல்பட்டு, அரிசி விலையை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டு வரும், எங்களிடம் அதிகாரிகள் வசூலில் ஈடுபடுவதை, தமிழக அரசு தடுத்து நிறுத்த வேண்டும்.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், தமிழகத்தில் நெல் விலை உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டு, இதே கால கட்டத்தில், கர்நாடகா டீலக்ஸ் நெல், கிலோ, 14 ரூபாய்க்கு விற்றது, 24 ரூபாய்க்கும், கிராந்தி கார், 13.50 ரூபாய்க்கு விற்றது, 19 ரூபாய்க்கும், பி.பி.டி., (பாபத்லால் பொன்னி) 12.50 ரூபாய்க்கு விற்றது, 20.50 ரூபாய்க்கும், ஏ.டி.டி., 37 ரகம், 12 ரூபாய்க்கு விற்றது, 18 ரூபாய்க்கும் விற்கிறது.நெல் விலை உயர்ந்துள்ள நிலையில், மின் தடை, அரிசி ஆலைகளுக்கு மேலும் ஒரு தலைவலியை கொடுத்து வருகிறது. தமிழகத்துக்கு நெல் வந்த போதிலும், மின்சாரம் கிடைக்காததால், நாள் ஒன்றுக்கு, 16 ஆயிரம் மூட்டை அரிசியை உற்பத்தி செய்து வந்த ஹைடெக் அரிசி ஆலைகள், தற்போது, 8,000 மூட்டை அரிசி மட்டுமே உற்பத்தி செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

அரிசி ஆலைகளில், 1,200 மூட்டை அரிசி உற்பத்திக்கு, 350 கே.வி., முதல், 400 கே.வி., மின்சாரம் தேவைப்படுகிறது. இந்த மின்சாரத்தை தங்கு தடையின்றி வழங்கினாலே, அரிசி உற்பத்தி அதிகரிக்கும்.நெல் விலை உயர்வு, வாகன போக்குவரத்து செலவு அதிகரிப்பு, மின் தடையால் உற்பத்தியில் பாதிப்பு, கூடுதல் மின் கட்டண செலவு, ரயில்களில் நெல்லுக்கான வாடகை, 20 சதவீதம் அதிகரிப்பு ஆகியவற்றின் காரணமாகவே, அரிசி விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது.தமிழக அரசு, அரிசி ஆலைகளுக்கு தடையில்லா மின்சாரம் வழங்குவதோடு, வெளி மாநிலங்களில் இருந்து கொண்டு வரப்படும் நெல்லுக்கான, கெடு பிடிகளை தளர்த்தினால், அரிசி விலையை கட்டுப்படுத்த முடியும்.இவ்வாறு அவர் கூறினார்.நேற்றைய நிலவரப்படி அரிசி விலை(கிலோ) விபரம் :வெள்ளை பொன்னி பழசு, 56 ரூபாய் , புதுசு, 53, கர்நாடகா சோனா பொன்னி,50, பி.பி.டி., (பாபத்லால்) பொன்னி பழசு, 53, புதுசு,51, கர்நாடகா டீலக்ஸ், 51 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

## வயல் வெளிகளை தேடி வரும் பறவைகள்:குச்சிகள் நட்டு கட்டுப்படுத்தும் விவசாயிகள்

கிருஷ்ணகிரி: வயல்வெளிகளில் புழு, பூச்சிகளை தீனிக்காக பிடிக்க வரும் பறவைகளிடம் இருந்து பயிர்களை பாதுகாக்க வயல் வெளிகளில் குச்சிகளை நட்டு அதில் துணிகளை விவசாயிகள் கட்டி வருகின்றனர்.கிருஷ்ணகிரி மாவட்டத்தில், பருவமழை பொய்த்து போனதால், கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. குறிப்பாக மேட்டுப்பாங்கான நிலங்கள் அதிகம் உள்ள பர்கூர், மத்தூர், போச்சம்பள்ளி, வேப்பனப்பள்ளி சுற்று வட்டார பகுதியில் கடும் வறட்சி ஏற்பட்டு நிலங்களில் புல், பூண்டு கூட முளைக்காமல் வறண்டு காணப்படுகிறது. இங்கு சுற்றி திரியும் பறவைகளுக்கு கூட உணவுப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.கே.ஆர்.பி., அணையில் முதல் போக சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடாத நிலையில், கடந்த ஒரு மாதத்துக்கு முன் அணையில் இருந்து இரண்டாம் போக சாகுபடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. இதை கொண்டு அவதானபட்டி, பெரியமுத்தூர், மலையாண்டஅள்ளி, சுண்டேகுப்பம், தேர்பட்டி போன்ற பகுதியில் விவசாயிகள் நெல் சாகுபடி செய்துள்ளனர். தற்போது, நெல் பயிர் களையெடுக்கும் நிலையில் உள்ளது.
மாவட்டத்தில் மற்ற இடங்களில் பறவைகளுக்கு உணவுக்கு பஞ்சம் ஏற்பட்டுள்ளதால் நீர்பாங்கான நிலங்கள் உள்ள கே.ஆர்.பி., அணை பாசன பகுதியில் அதிக அளவில் கொக்கு, நாரை போன்ற பறவைகள் படையெடுத்து வருகின்றது. இவ்வாறு கூட்டம், கூட்டமாக வரும் பறவைகள் வயல்களில் உள்ள பூச்சிகளை தின்பதற்காக வயல்களில் அமர்கிறது. கூட்டமாக பறவைகள் நெல் வயல்களில் அமரும்போது பயிர்கள் சேதாரமாகிறது.இவ்வாறு சேதமடையும் பயிர்கள் வளராமல் களையெடுக்கும் பருவத்திலேயே காய்ந்து விடும். இதனால் மகசூல் வெகுவாக பாதிக்கும். பறவைகள் கூட்டத்தில் இருந்து நெல் பயிர்களை காப்பாற்ற விவசாயிகள் தங்கள் நெல் வயலில் துணிகளை குச்சியில் கட்டி நட்டு வைத்துள்ளனர்.

## கோழி குஞ்சு விற்பனையில் லாபம்: வேலை இளைஞர்கள் புதிய முயற்சி

பந்தலூர்:பந்தலூர், கூடலூர் பகுதியில் கோழி குஞ்சு விற்பனை "சூடுபிடித்துள்ளதால்' வேலையில்லா இளைஞர்கள் பலர்<, இந்த தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

கூடலூர், பந்தலூர் பகுதிகளில் விவசாயம் மட்டுமின்றி,பிற தொழில்களிலும் வேலையில்லாத இளைஞர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதில் பலர் தர்மபுரி, கோவை ஆகிய பகுதிகளிலிருந்து கோழி குஞ்சுகளை மொத்தமாக வாங்கி வந்து, மொபட்டில் வைத்து விற்பனை செய்து, லாபம் சம்பாதித்து வருகின்றனர். பந்தலூர் அருகே எருமாடு பகுதியில், கூடாரம்

அமைத்து, ஒரு ஜோடி கோழி குஞ்சுகள் 100 ரூபாய்க்கு விற்பனை செய்கின்றனர். இந்த தொழிலில் 12 இளைஞர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இது குறித்து அவர்கள் கூறுகையில்," இந்த தொழிலில் பெரிய லாபம் இல்லாவிட்டாலும், வேலையில்லாமல் இருப்பதை விட, சுய தொழிலாக இதனை செய்ய எண்ணி, கோழி குஞ்சு வியாபாரத்தை துவங்கினோம். தற்போது, மாதத்திற்கு ஒருமுறை 12 ஆயிரம் கோழி குஞ்சுகளை கொண்டு வருகிறேன். எங்களின் வியாபாரம் நல்ல நிலையில் நடந்தால், பல இளைஞர்களுக்கும் பணி தரவும் வாய்ப்பு ஏற்படும்' என்றனர். இந்த இளைஞர்களை உள்ளூர் மக்களும் ஊக்கப்படுத்தி வருகின்றனர்.

## நெல்லின் மதிப்பை உணர்ந்த விவசாயி



மதுரையில் பெரியார், வைகை பாசனம் இல்லாததால் சாகுபடி நிலங்கள் தரிசாகவே உள்ளது. இதனால் பல விவசாயிகள் நெல் சாகுபடி செய்யாமல் பெரும் கஷ்டத்திற்கு உள்ளாகியுள்ளனர். மீண்டும் இந்த இடத்தில் நெல் சாகுபடி எப்போது வரும் என்று யாராலும் சொல்ல முடியாது. இருப்பினும் இறைவன் அருளால் கிணற்றுப்பாசனத்தில் நெல் விவசாயம் துவங்கி விவசாயிகள் திருப்தியாக உள்ளனர். இம்மாதிரியான விவசாயிகளிடம் அதிக பரப்பளவில் நிலம் இருந்தாலும் விவசாயிகள் குறுகிய நிலப்பரப்பில் நெல் சாகுபடி செய்து லாபம் எடுத்துள்ளனர்.

மதுரை மாவட்டம், வண்டியூர் கிராமத்தில் முற்போக்கு விவசாயி எம்.எ.விஜயநடராஜன் இயற்கை முறையில் நெல் சாகுபடி செய்து வருகிறார். இயற்கை முறையில் இவர் நெல் சாகுபடிசெய்ததால் பயிர் செழிப்பாக வந்ததோடு அவ்வப்போது பயிரில் வறட்சி ஏற்பட்டாலும் பாதிப்பு ஏற்படவில்லை. காரணம் இயற்கை முறை சாகுபடியில் பயிர்கள் ஓரளவிற்கு வறட்சியைத் தாங்குகின்றது. அதேபோல் இந்த பயிரானது கொடிய பூச்சி, வியாதிகளால் பாதிக்கப்படுவதில்லை. விஜய நடராஜன் ஒன்பது ஏக்கரில் இயற்கை விவசாயத்தில் இரண்டு நெல் ரகங்களை தேர்ந்தெடுத்து தனித்தனி வயல்களில் சாகுபடி செய்துள்ளார். இவர் சாகுபடி செய்த விவரம், அனுசரித்த சாகுபடி முறைகள் சுருக்கமாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

எபீடி 45 - வயது -120 நாட்கள். ஏக்கரில் 36 மூடை மகசூல் (மூடை 66 கிலோ).

ஒரு மூடை நெல் விலை - ரூ. 1,100.00

வரவு (36 மூடை து ரூ.1,100) - ரூ. 39,600.00

சாகுபடி செலவு - ரூ. 18,000.00

நிகர லாபம் - ரூ. 21,600.00

வைக்கோல் - ரூ. 2,500.00

ஜே-13 வயது-100 நாட்கள். ஏக்கரில் 36 மூடை மகசூல் (மூடை 66 கிலோ)

ஒரு மூடை நெல் விலை - ரூ. 1,100.00

வரவு (36 மூடை து ரூ.1,100) - ரூ. 39,600.00

சாகுபடி செலவு - ரூ. 16,000.00

நிகர லாபம் - ரூ. 23,600.00

வைக்கோல் - ரூ. 2,500.00

ஜே-13 நெல் சாகுபடி செலவு குறைவு. பராமரிப்பு செலவும் குறைவு. வைக்கோல் பஞ்சுபோல் இருக்கும். பசுக்கள் விரும்பி சாப்பிடும்.

உசிலம்பட்டி கிராமத்தில் 62 வயதுள்ள பி.வி.சண்முகம் என்பவர் எருமைகளை வளர்த்து தனது அன்றாட வாழ்க்கையை நடத்திக்கொண்டு வந்தார். அவருக்கு பக்கத்தில் உள்ள கண்மாய் உதவிவந்தது. இதில் தேவையான நீர் இருந்ததால் சண்முகத்திற்கு பிரச்னை இல்லாமல் இருந்தது. திடீரென்று கண்மாய்களை சரிவர பராமரிக்காமல் விட்டதால் தண்ணீரே இல்லாமல் போய்விட்டது. உடனே சண்முகம் தனது எருமைகளை விற்றுவிட்டார். முக்கியமான காரணம் எருமைகளுக்கு குடிக்கத் தேவையான தண்ணீரைத் தவிர அதற்கு குளிப்பாட்டும் அளவு தண்ணீர் இல்லாமல் போய்விட்டது. எருமைகளுக்கு இந்த அளவு தண்ணீர் இல்லாவிட்டால் அவைகளுக்கு பால் கொடுக்கும் திறமை போய் அவை மாண்டுவிடுவதற்கான வாய்ப்பு உண்டு. உடனே இப்பகுதியில் உள்ள சண்மும் போன்ற பலர் ஒரு திட்டம் தீட்டி தங்கள் ஊருக்கு அருகில் உள்ள பொண்ணாச்சி கண்மாயில் அதிகமான நீரை சேர்த்தார்கள். இதற்குத் தேவையான பராமரிப்பு பணிகளையும் செய்தார்கள். சென்ற வருடம் வடகிழக்கு பருவமழை பெய்யாவிட்டாலும் மக்கள் தற்போது சந்தோஷமாக உள்ளனர். சண்முகம் அதிக அளவு எருமைகளை வாங்கி தனது பணியைத் துவக்கி சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டார்.

தற்போது கிணற்றுப்பாசனத்தில் விவசாயிகள் நெல் சாகுபடி செய்ய வேண்டிய கட்டாய சூழ்நிலைக்கு வந்துவிட்டார்கள். இவர்களும் பாடுபட்டு உழைத்து கிணறுகளில் தண்ணீர் வற்றாமல் இருக்க தொழில்நுட்பங்களை அனுசரிக்கலாம். இதற்காக ஒரு சமுதாய இயக்கத்தை உருவாக்கி கிணறுகளில் தண்ணீர் நிற்க வழி கண்டுபிடிக்கலாம்.

நெல் பயிர் மிக முக்கியமான உணவுப்பயிர். ஆகையால் அந்த நிலங்களில் வேறுபயிர்களை சாகுபடி செய்யாமல் நெல் சாகுபடியையே தொடர்ந்து செய்துவருவதால் அவர்களை நாம் பாராட்ட வேண்டும்.

### நவீன தொழில்நுட்பம்

**வேர்பூசணம் (உயிர் உரம்):**

வேர் பூசணங்கள் இரு வகைப்படும். அவை "வேர் உட்பூசணம்', "வெளி பூசணம்' ஆகும். "வேர் உட்பூசணம்' என்பது பயிர்களின் வேர்களின் உள்ளே சென்று பயிர்களின் வளர்ச்சியின் செயல்பாட்டுடன் நேரடியாக தொடர்பு கொண்டு பயிர்களுக்கு தேவையான நீர், மணிச்சத்து, கந்தகம், தாமிரம் ஆகியவைகளை எளிதாக பயிர்கள் எடுத்துக்கொள்ள உதவுவது ஆகும்.
"வேர் வெளி பூசணம்' பயிர்களில் உள்ள வேர்களின் மேற்பரப்பில் ஒட்டி கண்ணுக்குத் தெரியாத படலமாக வளர்ந்து பயிர்களுக்குத் தேவையான நீர், மணிச்சத்து, துத்தநாகம், தாமிரம் ஆகியவைகளை எளிதாக பயிர்கள் எடுத்துக்கொள்ள உதவுகிறது. இவ்விரண்டு வகைகளில் பயிர்களுக்கு அதிகமான பலனைக்கொடுப்பது "வேர் உட்பூசணம்' ஆகும்.
ஆர்பஸ்குலார் மைக்கோரைசாவின் வித்துக்கள் மண்ணில் வாழ்கின்றன. இவ்வித்துக்கள் ஏற்ற சூழ்நிலையில் முளைத்து நூலிழை போன்ற வடிவில் பயிர்களின் வேர்களை நோக்கி பரவுகின்றன. வேர்களை அடைந்ததும் வேர்களின் செல்களுக்குள் ஊடுருவிச் சென்று ஆபெஸ்கியூல், வெஸிக்கிள் என்ற தனக்கே உரிய சிறப்பு வடிவமைப்புக்களை உருவாக்குகின்றன. மேலும் அவை வேரிலும் மண்ணிலும் அடர்ந்து பரவி வெகுதூரம் வரை சென்று மண்ணில் உள்ள மணிச்சத்து, இதர சத்துக்களையும் நீரையும் உறிஞ்சி ஒரு குழாய் போல செயல்பட்டு நேரடியாக வேரின் செல்களுக்கு வழங்குகின்றன. இதன்மூலம் வேர்களின் உறிஞ்சும் திறன் அதிகரிப்பதோடு நூலிழைகள் பரவியிருக்கக்கூடிய மண்ணின் அளவும் அதிகப்படுத்தப்படுகின்றது.

**வேர் உட்பூசணம் செய்யும் முறை:**
உழவர்கள் தங்கள் நிலத்திலேயே எளிதாக தயார் செய்யலாம். 6'x2'x2' என்ற அளவுக்கு குழி அல்லது தொட்டியினை அமைக்க வேண்டும். அதில் பாலிதீன் தாளினை விரிக்க வேண்டும். வெர்பிகுலைட் என்ற களிமண் தாதினை 450 கிலோ, கிருமி நீக்கம் செய்யப்பட்ட வயல் / தோட்டத்தின் மண் 50 கிலோ கலந்து குழியின் முக்கால் பாகத்திற்கு நிரப்ப வேண்டும். இவ்வாறு நிரப்பப்பட்ட மண்ணின் மீது 25 கிலோ (5 சதம்) அளவுக்கு வேர் உட்பூசண தாய் வித்தினைத் தூவி நன்றாக கலக்க வேண்டும். இவ்வாறு கலக்கப்பட்ட மண் குழியின் மேற்பரப்பில் 10 செ.மீ. இடைவெளியில் பார் அமைத்து 5 செ.மீ. இடைவெளியில் சுத்தம் செய்யப்பட்ட சோளம் அல்லது மக்காச்சோள விதையை விதைக்க வேண்டும். இப்பயிர் வேர்களின் மூலம் தாய் வித்துக்களின் உதவியுடன் பன்மடங்காக வளர்ச்சியடைந்து மண் குவியல் அனைத்தும் வேர் உட்பூசணமாக மாறும்.
விதைக்கப்பட்ட சோளத்தின் வளர்ச்சிக்காக 20 கிராம் யூரியா, 45 கிராம் சூப்பர் பாஸ்பேட், 15 கிராம் பொட்டாஷ் ஆகியவற்றினை அடியுரமாகக் கொடுக்க வேண்டும். விதைத்த 7ம் நாளில் 3 கிராம் நுண்ணூட்டக் கலவையை இடவேண்டும். விதைத்த 30ம் நாளில் 15 கிராம் யூரியாவையும் இடவேண்டும். குழி அல்லது தொட்டியின் ஈரப்பதம் 60 சதவீதத்திற்கும் குறையாமல் பாதுகாக்க

வேண்டும்.

கோழி, எலி, பறவைகளால் பாதிக்கப்படாமல் இருக்க கோழி வலையைக் கொண்டு மூடிவைக்க வேண்டும். இவ்வலையினை 20ம் நாள் எடுத்துவிட வேண்டும். தொட்டியில் வளரும் செடி 60 நாட்களுக்கு இருக்க வேண்டும். பின்னர் செடியின் தண்டுப்பகுதியை முழுவதுமாக நீக்கிவிட வேண்டும். வேர்ப்பகுதியை சிறு சிறு துண்டுகளாகக் குழியில் உள்ள வெர்மிகுலேட்டுடன் நன்கு கலக்க வேண்டும். இதனால் வேர் உட்பூசண உரம் குழியில் உள்ள அனைத்து மண்ணும் சீராக பரவி முழுமையாக கிடைக்கும்.

நீர் பாய்ச்சியபின் மண்ணில் ஈரப்பதம் இருக்கும்போது பயிர்களின் வேர் மண்டலத்திற்கு அருகில் வேர் உட்பூசணத்தை பயிர்களுக்கு 50 கிராம் வீதமும், பெரிய மரங்களுக்கு 200 கிராம் வீதமும் பயன்படுத்தலாம். நாற்றங்காலில் ஒரு சதுரமீட்டருக்கு 100 கிராம் வேர் உட்பூசணம் இட்டால் போதும்.

விதைப்பதற்கு முன் நாற்றங்காலில் மண்ணிற்கு கீழே 5-6 செ.மீ. ஆழத்தில் இடவேண்டும். மரங்களுக்கு ஒரு மரத்திற்கு 50-200 கிராம் வேர் உட்பூசணம் இட்டு மண் அணைக்க வேண்டும். மஞ்சள், இஞ்சி, மிளகாய், காய்கறி பயிர்களுக்கு ஒரு ஏக்கருக்கு 25 முதல் 250 கிலோ போதுமானது.

தென்னை மரம் ஒன்றுக்கு 250-500 கி வரை இடலாம். பருத்திக்கு எக்டருக்கு 50 கிலோ என்ற அளவில் இடலாம். வேர் உட்பூசணம் வேரைத்தாக்கும் நோய், நூற்புழுக்களின் தாக்கத்தையும் கட்டுப்படுத்துகிறது. பயிர் வளர்ச்சியினை ஊக்குவிப்பதால் 10-15 சதம் விளைச்சல் அதிகரிக்கிறது. (தகவல்: முனைவர் வெ.அழகேசன், சீனிவாசன், சேகர், மைராடா வேளாண் அறிவியல் நிலையம், கோபிசெட்டிபாளையம்-638 453. போன்: 04285-241 626)

## மணத்தக்காளி சாகுபடி



லராலும் விரும்பிச் சாப்பிடப்படும் கீரை வகைகளில் இம்மூலிகையும் ஒன்று. இது சொலானம் நைக்ரம் என்ற தாவரவியல் பெயரில் சொலனேசி குடும்பத்தில் காணப்படுகிறது. மிளகு போன்று தோற்றமளிப்பதாலேயே மிளகுத் தக்காளி எனப்படுகிறது.

வெப்ப மண்டல நாடுகளில் மிகுதியாகக் காணப்படுகிறது. தமிழகத்தில் மணற்பாங்கான மற்றும் கரிசல் மண் பூமிகளில் உள்ளது. ஆப்பிரிக்கா மற்றும் வட அமெரிக்க நாடுகளிலும் பயிரிடப்படுகிறது. எத்தியோப்பியாவில் வறட்சிக் காலங்களில் அங்கு முக்கிய உணவாக உண்ணப்படுகிறது. பூக்கள் வெண்மையாய் இருக்கும். காய்கள் கருமையாகவும், கரும்பச்சையாகவும் காணப்படும். பழுக்கும்போது சிவப்பு, மஞ்சள், கருப்பு ஆகிய நிறங்களோடு இருக்கும். இதனுடைய இலை, தண்டு, கனி எல்லாவற்றையும் உணவு மற்றும் மருந்தாகப் பயன்படுத்தலாம்.

ஈரோடு மற்றும் சேலம் போன்ற மஞ்சள் பயிரிடப்படும் பகுதிகளில் மஞ்சளில் முக்கிய களையாக மணத்தக்காளி விளங்குகிறது. விவசாயிகள் அதனை சரியான முறையில் காயவைத்து மூலிகை கம்பெனிகளுக்கு விற்பனை செய்யலாம்.

இச்செடியில் புரதம், கொழுப்பு-1%, தாது உப்புக்கள்-2.1%, வைட்டமின் சி, சுண்ணாம்பு சத்து, இரும்புச்சத்து, மணிச்சத்து முதலியன காணப்படுகிறது.

100 கிராம் செடியில் 410மிகி சுண்ணாம்புச்சத்து, 70 மிகி மணிச்சத்து, 20.5 மிகி இரும்புச் சத்து, 20.5மிகி. வைட்டமின் சி இருக்கிறது. இம்மூலிகையானது வாய் புண், குடல் புண் மற்றும் கல்லீரல் வீக்கத்தைக் குணப்படுத்தும் சக்தி கொண்டது.

**சாகுபடி:** விதைகள் மூலமே இது உற்பத்தி செய்யப் படுகிறது. எல்லா வகை மண்ணிலும் வளரும். பழங்கள் காயவைக்கப்பட்டு விதைகள் சேகரித்து சாம்பலுடன் கலந்து படுக்கைகள் அமைத்து விதை தூவப்பட வேண்டும். ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ விதை தேவைப்படுகிறது. தொழு உரம் இடுவது மிகவும் அவசியமாகும். 6 செ.மீ. உயரம் வளர்ந்தவுடன் கன்றுகளை பிரித்து வயலில் நடலாம். தண்ணீர் பாய்ச்சுவது அவசியம். கன்றுகள் 30 செ.மீ. து 45 செ.மீ. இடைவெளியில் நடவேண்டும். நட்ட செடிகள் மூன்று மாத இடைவெளியில் 120 செ.மீ. வரை வளரும். இதனுடைய மொத்த சாகுபடி காலம் 120 நாட்கள் மட்டுமே.

**அறுவடை:** செடிகள் வேருடன் பறிக்கப்பட்டு, வேர் பாகம் தவிர்த்து மேல் பகுதிகளான இலை, தண்டு முதலியன துண்டு துண்டாக வெட்டி காய வைக்க வேண்டும். காய வைப்பதற்கு முன் பழங்களை பறித்து விடுவதன் மூலம் விரைவாக காயவும் மற்றும் பூசானம் ஏற்படாமல் தவிர்க்க முடியும். மூன்று நாட்கள் வரை நன்கு காய்ந்தபின் சாக்கு பைகளில் நிரப்ப வேண்டும். காய்ந்த செடியில் ஈரப்பதம் 8%க்கு மிகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். சிமெண்ட் களம் மற்றும் தார்பாலின் கொண்டு காயவைப்பதன் மூலம் மற்ற தாவரங்கள், மண், கல் ஆகியவை கலந்துவிடாமல் தவிர்க்க முடியும். ஒரு ஏக்கருக்கு 1000-1500 கிலோ வரை காய்ந்த மகசூலை

எதிர்பார்க்கலாம். தற்போது ஒரு டன் ரூபாய் 30,000 வரை கொள்முதல் செய்யப்படுகிறது.

**சந்தைப்படுத்துதல்:** இன்று மருந்து கம்பெனிகளுக்கு இதனுடைய தேவை அதிகமாக உள்ளது. பெங்களூருவில் உள்ள நேச்சுரல் ரெமடிஸ் போன்ற நிறுவனங்கள் அதிக அளவில் கொள்முதல் செய்வதுடன் ஒப்பந்த சாகுபடியையும் ஊக்குவிக்கின்றன. கம்பெனிகளுக்கு அனுப்பும்போது பயிரிட்டதற்கான சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும். சான்றிதழை வேளாண்மை விரிவாக்க மையம் மற்றும் கிராம நிர்வாக அதிகாரியிடம் இருந்தும் பெறலாம்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

12.02.2013 A.M

## நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை வரலாறு காணாத உயர்வு



நாமக்கல் : நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை 370 காசாக விலை உயர்ந்துள்ளது. நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணயக் குழு கூட்டம் நடைபெற்றது. முட்டை விலையை உயர்த்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டது. ஏற்கனவே 365 காசாக இருந்த முட்டை விலையில் 5 காசு உயர்த்தி, ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 370 காசுகளாக நிர்ணயிக்கப்பட்டது.

நாமக்கல் மண்டல கோழி பண்ணை வரலாற்றில் இதுவே அதிகபட்ச விலை என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 13 முதல் 23ம் தேதி வரை ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை அதிகபட்சமாக 365 காசாக இருந்தது. தற்போது அதையும் தாண்டி, 370 காசாக உயர்ந்துள்ளது. இது குறித்து நாமக்கல் கோழி பண்ணையாளர்கள் சம்மேளன செயலாளர் இளங்கோ கூறியதாவது:

கோழித் தீவனத்தின் விலை பல மடங்கு உயர்ந்துள்ளது. இதனால், பண்ணைகளில் இருந்து 20 சதவீத முட்டை கோழிகளை பண்ணையாளர்கள் விற்றுவிட்டனர். சபரிமலை சீசன் முடிந்து விட்டதால் தமிழகம், கேரளாவில் முட்டை தேவை அதிகரித்துள்ளது. வடமாநிலங்களிலும் குளிர்

காரணமாக முட்டைக்கு டிமாண்ட் ஏற்பட்டுள்ளது.
இந்த சூழ்நிலையில், நாமக்கல் மண்டலத்தில் முட்டை உற்பத்தி குறைந்து விட்டது. முட்டைக்கு பற்றாக்குறை ஏற்பட்டதால் விலை உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த விலை போதுமானதல்ல. கோழித் தீவன மூலப் பொருட்கள் அதிக விலை கொடுத்தாலும் கிடைப்பதில்லை. இதனால் வரும் வாரங்களில் முட்டை விலை மேலும் உயரும். ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை ரூ.4க்கு வந்தால் மட்டுமே பண்ணையாளர்கள் தொடர்ந்து தொழில் செய்ய முடியும். இவ்வாறு இளங்கோ தெரிவித்தார்.

இன்றைய வேளாண் செய்திகள்
12.02.2013 A.M

## விவசாயத்தில் தண்ணீரை சேமிக்க உதவும் சொட்டு நீர்ப்பாசனம் வேளாண்மை அதிகாரி தகவல்

கோபிசெட்டிபாளையம்,

தண்ணீரை சிக்கனப்படுத்தி சீராக விவசாயம் செய்ய சொட்டு நீர்ப்பாசனம் பயன்படுகிறது என்று வேளாண்மை அதிகாரி ஆசைத்தம்பி தகவல் தெரிவித்து உள்ளார்.

### சொட்டு நீர்ப்பாசனம்

கோபிசெட்டிபாளையம் வேளாண்மை உதவி இயக்குனர் ஆசைத்தம்பி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

வேளாண்மைக்கு அடிப்படையான நீரையும், நிலத்தையும் தவிர பிற இடுபொருள்களான நல்ல விதைகள், உரங்கள், பூச்சி மருந்துகள் மற்றும் களைக்கொல்லிகள் ஆகியவற்றை தேவைக்கு ஏற்ப உற்பத்தி செய்ய முடியும். ஆனால், நீரும், நிலமும் உற்பத்தி செய்ய இயலாதவை. சேமிக்கும் பாசன நீரின் அளவு அதன் உற்பத்திக்கு சமம்.

நுண்ணீர் பாசனத் திட்டமான சொட்டு நீர்ப்பாசனம், தெளிப்பு நீர்ப்பாசனம் ஆகியவற்றின் மூலம் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தலாம். சொட்டு நீர்ப்பாசனம் என்பது பயிருக்கு தேவையான நீரை எந்தவித சேதாரமும் இன்றி செடியின் வேர்ப்பகுதிக்கு, உரிய குழாய்கள் மூலமாக எடுத்துச் சென்று துளிப்பான்கள் மற்றும் சொட்டுக்கள் மூலமாக வேர்ப்பகுதியில் சீரான அழுத்தத்தில் சொட்டுச் சொட்டாக அளிப்பதேயாகும்.

### மிச்சப்படுத்தப்படும் நீர்

இந்த முறையில் குறைந்த அளவு நீரைக் கொண்டு அதிகப் பரப்பளவில் மா, கொய்யா, மாதுளை, சப்போட்டா, நெல்லி மற்றும் எலுமிச்சை போன்ற பழ மரங்கள், வெண்டை, கத்தரி, தக்காளி

போன்ற காய்கறி வகைகள் தென்னை, வாழை, பருத்தி, கரும்பு, மஞ்சள் போன்ற பணப்பயிர்கள் மற்றும் முல்லை, ரோஜா, மல்லிகை போன்ற பூச்செடிகள் வளர்க்கப்படுகின்றன.

வேர்ப்பகுதியில் தண்ணீர் உரிய அளவு தரப்படுவதால் நீர் விரயம் ஆவது தடுக்கப்படுகிறது. இதன் மூலம் 50 முதல் 80 சதவீத நீர் மிச்சப்படுத்தப்படுகிறது. உரிய அளவு நீர் மற்றும் கரையும் உரம் போன்றவற்றை அளிக்கும்போது 50 முதல் 100 சதவீத மகசூல் அதிகரிக்கிறது. சாதாரணப் பாசனத்தில் உபயோகப்படுத்தும் நீரைக் கொண்டு சொட்டு நீர்ப்பாசனத்தில் மூன்று பங்கு நிலத்தில் பாசனம் செய்யலாம்.

வறட்சிக் காலத்தில் விவசாயம்

சொட்டு நீர்ப்பாசனம் மூலம் வறட்சிக் காலத்தில் முழுமையாக விவசாயம் செய்யலாம். களைகள், இலை உதிர்தல் மற்றும் பிற நோய்கள் தடுக்கப்படுகிறது. மலைப்பகுதிகளில் மண் அரிப்புத் தடுக்கப்படுகிறது. மேடு, பள்ளங்களிலும் நிலம் சமன் செய்யாமல் உள்ளவாறே விவசாயம் செய்யலாம். நிலச்சமன்பாடு செலவும் குறையும். எல்லா பருவ காலத்திலும் நீர்ப்பாய்ச்ச முடிகிறது.

சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க ஒருமுறைதான் செலவு ஆகிறது. பிறகு, வருடந்தோறும் அதிக மகசூல் பெறுவதன் மூலம் கூடுதல் லாபம் பெற முடிகிறது. குறைந்த அளவு மின்சாரத்தை உபயோகப்படுத்தி சரி சமமாக நீர்ப்பாய்ச்சலாம். விவசாய விளைபொருளின் தரம் உயருகிறது. வேளாண்மை தொழில் நவீனப்படுத்தப்படுவதோடு எளிமைப்படுத்தப்படுகிறது. நீர்ப்பாய்ச்சுதல், களை எடுத்தல் போன்ற பணிகளுக்கு தேவைப்படும் வேலைப்பளு கணிசமாக குறைகிறது.

வடிகட்டிகளின் வகைகள்

கிணற்றில் உள்ள நீர், சொட்டு நீர்ப்பாசனத்துக்கு தேவையான அழுத்தத்துடன் மேலே கொண்டு வந்து பாசனம் செய்ய பயன்படுத்தப்படுகிறது. நீரில் கலந்து இருக்கக்கூடிய பல்வேறு துருப்புகள், குப்பைகள், சிறு மணல், பாசி போன்ற பல பொருள்கள் இதன் மூலம் வடிகட்டப்படுகின்றன. நீரின் அசுத்தத் தன்மைக்கு ஏற்ப தட்டு வடிகட்டி, சுழல் வடிகட்டி, மணல் வடிகட்டி போன்ற பலவகை வடிகட்டிகளை பயன்படுத்தி பாசன நீர் சுத்தம் செய்யப்படுகிறது.

அதனால், சொட்டு வான்களில் அடைப்பு ஏற்படாது. மேலும், அழுத்தமானி, காற்று வெளியேற்றும் கருவி, கழிவு வெளியேற்றும் அமைப்பு ஆகியவை வடிப்பானில் பொருத்தப்பட்டு உள்ளது. இவை எளிதாக சுத்தம் செய்யவும் வடிப்பான்களை நல்ல முறையில் பராமரிக்கவும் உதவுகிறது.

## சொட்டுவான்

வென்ச்சுரியின் உதவியால் செயற்கை ரசாயன உரத்தை மற்றும் இயற்கை உரங்களை நீரில் கரைத்து சொட்டுவான் மூலம் தேவைக்கேற்ப பயிரின் வேர் பகுதிக்கும் நேரடியாக கொடுக்க முடியும். அதனால் பயிருக்குத் தேவைப்படும் அளவில் செயற்கை ரசாயன உரம் கிடைக்கும். பயிர் நன்றாக வளர்ச்சி அடையும். மேலும், சொட்டு நீர்ப்பாசன அமைப்பை அமிலக் கரைசல் மற்றும் குளோரின் கரைசல் கொண்டும் சுத்தம் செய்யவும் பயன்படுகிறது.

இதுவும் ஒரு உரமிடும் கருவிதான். உள்பகுதி மற்றும் வெளிப்பகுதியில் நிலவும் வேறுபட்ட அழுத்தத்தால் வேலை செய்கிறது. உரத்தொட்டியை நான் ரிட்டன் வால்வுக்கு அடுத்ததாகப் பொருத்த வேண்டும். இதன் மூலம் எதிர் திசையில் நீர் பாய்வதை தடுக்க முடியும். உரத்தொட்டியானது 20, 30, 40, 60, 80, 90, 120, 180 லிட்டர் கொள்ளளவில் தேவைக்கு ஏற்ப உபயோகத்தில் உள்ளது.

## தரக்கட்டுப்பாட்டுடன்...

இதுவும் ஒரு உரமிடும் கருவிதான். நீரில் கரையும் உரக்கரைசலை தேவைப்படும் விகிதாசாரப்படி சரியான முறையில் பாசன நீருடன் செலுத்த இந்த வகை உரம் செலுத்தும் பம்புகள் உபயோகத்தில் உள்ளது. அதிக பரப்புள்ள பண்ணைகளில் இந்த வகை பம்புகள் நல்ல முறையில் பயன்படுகிறது.

மேற்குறிப்பிட்ட குழாய்கள், பாலிவினைல் குளோரைடு என்கிற உயர் தரமிக்க மூலப்பொருளால் சொட்டு நீர்ப்பாசனத்திற்கு உரிய வகையில், இந்த தரக்கட்டுப்பாட்டுடன் உயர் அழுத்தம் தாங்குமாறு பல்வேறு அளவுகளில் தயாரிக்கப்படுகின்றன. இந்த குழாய்களில் உப்பு படிவது என்பது குறைவு. மேலும், அதனை அகற்றிச் சுத்தம் செய்வது என்பது மிகவும் எளிது.

## சொட்டு நீர்ப்பாசன மானியம்

இவை துணைப் பிரதானக் குழாயுடன் இணைக்கப்படும். இத்தகைய பக்கவாட்டுக் குழல்கள்தான் இந்த பாசன அமைப்பின் முக்கிய உயிர் நாடியாகும். எல்லாவிதமான தட்பவெட்ப நிலைக்கும் ஏற்றவாறு கார்பன் பிளாக் என்ற முக்கிய மூலப்பொருள் கலந்து சிறந்த முறையில் தரக்கட்டுப்பாட்டுடன் இவை தயாரிக்கப்படுகின்றன. இந்த குழல்கள் 16 மில்லி மீட்டர் மற்றும் 12 மில்லி மீட்டர் குறுக்களவுகளில் கிடைக்கிறது.

தற்போது சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க விரும்பும் சிறு, குறு விவசாயிகளுக்கு அதிகபட்சமாக 100 சதவீத மானியமாக ரூ.43 ஆயிரத்து 816 வழங்கப்படுகிறது. 5 அடி அகலம் உள்ள பார்கள் அமைந்த கரும்பு வயலுக்கு இதன்மூலம் 1½ ஏக்கருக்கு முழு மானியத்தில் சொட்டு நீர்ப்பாசனக் கருவிகள் அமைத்துக் கொள்ளலாம்.

கூடுதல் விபரம் அறிய...

மேலும், துல்லிய பண்ணையம் மற்றும் செம்மை கரும்பு சாகுபடி திட்டங்களில் ரூ.25 ஆயிரம் மதிப்பிலான நீரில் கரையும் உரங்கள் மற்றும் இடுபொருள்கள் முழு மானியத்தில் வழங்கப்படுகின்றன. மேலும், 5 ஏக்கருக்கும் கூடுதலாக நிலம் வைத்துள்ள விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்தில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க விரும்புவோருக்கு முன்பதிவு செய்யப்பட்டு வருகிறது.

இதுகுறித்து மேலும் கூடுதல் விவரம் அறிய கோபிசெட்டிபாளையம் ஊராட்சி ஒன்றிய வளாகத்தில் உள்ள வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தை அணுகலாம்.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கோபிசெட்டிபாளையம் வேளாண்மை உதவி இயக்குனர் ஆசைத்தம்பி தெரிவித்து உள்ளார்.

## கோபி ஒன்றியத்தில் மானிய விலையில் விவசாயிகளுக்கு ஜிப்சம் உரம் விற்பனை வேளாண்மை உதவி இயக்குனர் தகவல்

ஈரோடு

கோபி ஒன்றியத்தில் மானிய விலையில் விவசாயிகளுக்கு ஜிப்சம் உரம் விற்பனை செய்யப்படுகிறது என்று வேளாண்மை உதவி இயக்குனர் ஆசைத்தம்பி தகவல் தெரிவித்து உள்ளார்.

நிலக்கடலை சாகுபடி

கோபிசெட்டிபாளையம் வேளாண்மை வட்டாரத்துக்கு உள்பட்ட அயலூர், வெள்ளாங்கோவில், கடுக்காம்பாளையம், பொலவக்காளிபாளையம், கொளப்பலூர், வெள்ளாளபாளையம், பொம்மநாயக்கன்பாளையம், கூகலூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் இறவை முறையில் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டு உள்ளது.

கடும் வறட்சியால் ஆழ்துளை குழாய் கிணறுகளில் குறைந்த அளவே தண்ணீர் உள்ளதால், சிக்கனமாக பயன்படுத்தி நிலக்கடலை செடிக்கு விவசாயிகள் தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர். தற்போது கோபிசெட்டிபாளையம் வேளாண்மை வட்டார பகுதிகளில் நிலக்கடலைச்செடி செழித்து வளர்ந்து உள்ளது.

ஜிப்சம் உரம் அவசியம்

நிலக்கடலைச்செடி விதைப்பின்போதும், களை வெட்டி மண் அணைக்கும் போதும் ஜிப்சம் உரம் இட வேண்டும் என்று வேளாண்மைத்துறை அதிகாரிகள் பரிந்துரை செய்து உள்ளனர். ஜிப்சத்தில் கால்சியம் சத்து 18 சதவீதம் முதல் 23 சதவீதம் வரையும், கந்தகச்சத்து 18 சதவீதம் வரையும் உள்ளது. இதில், கந்தகச்சத்து குறைபாட்டினால் விளைச்சல் பாதிப்பதுடன், பயிர் வளர்ச்சியும் பாதிக்கப்பட்டு மகசூல் குறைகிறது.

இந்த நிலையில், கோபிசெட்டிபாளையத்தில் நிலக்கடலைச்செடி நன்கு வளர்ச்சி அடைந்து உள்ளதால் களை வெட்டும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு உள்ளனர். நிலக்கடலை சாகுபடி செய்து உள்ள விவசாயிகள் கூடுதல் மகசூல் பெற ஜிப்சம் உரத்தை இட வேண்டும் என்று வேளாண்மை அதிகாரிகள் அறிவுறுத்தி உள்ளனர்.

மானிய விலையில் விற்பனை

இதுகுறித்து கோபி வேளாண்மை உதவி இயக்குனர் ஆசைத்தம்பி கூறியதாவது:–

நிலக்கடலை மட்டுமல்லாமல் களர் மண் நிலங்களில் சாகுபடி செய்யப்பட்டு உள்ள பயிர்களின் மகசூலை அதிகரிக்க ஜிப்சம் பயன்படுத்தப்படுகிறது. நெல், கரும்பு உள்ளிட்ட பல்வேறு பயிர்களுக்கு ஜிப்சம் உரமிட்டு, பயிர் வளத்தை அதிகரிக்கலாம். தற்போது கோபிசெட்டிபாளையம் வட்டாரத்தில் கோபி, கூகலூர், வெள்ளாங்கோவில் ஆகிய பகுதிகளில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களில் ஜிப்சம் உரம் 50 சதவீதம் மானிய விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

இதற்காக எக்டேர் ஒன்றுக்கு ரூ.750 மானியமாக வழங்கப்படுகிறது. எனவே, ஜிப்சம் உரம் தேவைப்படும் விவசாயிகள் தங்களுடைய ரேஷன் கார்டு நகலுடன் சம்பந்தப்பட்ட வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகி பயன் பெறலாம்.இவ்வாறு அவர் கூறினார்.

## மத்திய அரசின் நடவடிக்கையால் தேங்காய் எண்ணெய் ஏற்றுமதி அதிகரிக்கும்

கொச்சி,

மத்திய அரசின் நடவடிக்கையால் தேங்காய் எண்ணெய் ஏற்றுமதி அதிகரிக்க வாய்ப்புள்ளது. நாட்டின் அனைத்து துறைமுகங்கள் மூலமாக தேங்காய் எண்ணெய் ஏற்றுமதிக்கு மத்திய அரசு அனுமதித்துள்ளது. மேலும், தேங்காய் வளர்ச்சி வாரியம் புதிய ஏற்றுமதியாளர்களுக்கு தேங்காய் எண்ணெய் ஏற்றுமதிக்கு அனுமதி வழங்க முயற்சிகள் மேற்கொண்டுள்ளது.

நடப்பு 2012–13 (அக்டோபர் – செப்டம்பர்) எண்ணெய் பருவத்தில் 1.5 லட்சம் டன் தேங்காய் எண்ணெய் ஏற்றுமதி செய்ய தேங்காய் வளர்ச்சி வாரியம் முயற்சிகள் மேற்கொள்ள இருப்பதாக அதன் தலைவர் டி.கே.ஜோஸ் தெரிவித்துள்ளார். இதில், கேரள மாநிலத்தின் பங்கு 50,000 டன்னாகவும், தமிழ்நாடு உள்ளிட்ட இதர மாநிலங்களின் பங்கு 1 லட்சம் டன்னாகவும் இருக்கும்.

மத்திய கிழக்கு நாடுகளில் தேங்காய் எண்ணெய் தேவைப்பாடு அதிகமாக உள்ளது. தற்பொழுது, மத்திய கிழக்கு நாடுகளின் சந்தையில் பிலிப்பைன்ஸ் மற்றும் இலங்கை நாடுகள் கோலோச்சி வருகின்றன. அதற்கு ஈடுகொடுக்கும் வகையில், மத்திய கிழக்கு நாடுகளில் எண்ணெய் வர்த்தகத்தை அதிகரிக்கச் செய்து, நிர்ணயித்த இலக்கை எட்ட வாரியம் திட்டமிட்டுள்ளது. மேலும் அமெரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா மற்றும் தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளில் வாழும் இந்தியர்களிடையே எண்ணெய் பயன்பாடு அதிகரித்துள்ளதும் தேங்காய் எண்ணெய் ஏற்றுமதி அதிகரிக்க வாய்ப்பாக அமைந்துள்ளது.

இந்தியாவில் சுமார் 4.8 லட்சம் டன் தேங்காய் எண்ணெய் உற்பத்தியாகிறது. கேரளா மற்றும் கர்நாடகாவின் சில மாவட்டங்களில் மட்டுமே மக்கள் தேங்காய் எண்ணெயை சமையலுக்கு பயன்படுத்துகின்றனர். மற்ற மாநிலங்களில் இது கேச எண்ணெயாக பயன்படுத்தப்படுகிறது.